
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# இந்து கலாசாரம்

**இந்து சமய திங்கள் வெளியீடு**



வானவூர்தியில் வானுலகம் சென்று கொண்டிருக்கும் அறுபத்தி நான்காவது நாயனாராகப் போற்றப்படும் கிருபா கடாட்சத்தை ஆனந்தமாக வாரிவாரி வழங்கிய கிருபானந்தவாரியார் சுவாமிகள்

## நான்காம் ஆண்டு நிறைவு மலர்



அண்மையில் சமாதியடைந்த
காஞ்சி மாமுனிவர் ஜெகத்குரு சந்திரசேகர இந்திரசரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள்



# வாழ்த்துரை

**ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாணந்தா**

*(இராமகிருஷ்ணமிஷன் தலைவர்)*

'இந்து கலாசாரம்' மாத சஞ்சிகை தனது நான்கு வயதைப் பூர்த்தி செய்து, அதனைக் கொண்டாடும் முகமாக ஒரு சிறப்பிதழினை வெளியிட உள்ளதை அறிந்து மகிழ்ச்சி.

'இந்து கலாசாரம்' இதழுக்கு எனது மனமார்ந்த பாராட்டுதல்கள், வாழ்த்துக்கள்.

எத்தனையோ சிரமங்களுக்கிடையே இவ் விதழ் வெளியிடப்படுவதை பலர் அறியார்.

இந்து சமய வளர்ச்சியில் அக்கறை கொண்ட பெரியார்கள், இப்பத்திரிகையின் வளர்ச்சிக்கு தங்கள் ஆதரவை நல்க முன்வர வேண்டும்.

'இந்து கலாசாரம்' தனது சமய, சமூகப் பணிகளை இன்னும் அதி உற்சாகத்துடன் முன் எடுத்துச் செல்ல இறையருளைப் பிரார்த்திக்கின்றேன்.

36264

# வாழ்த்துரை



**மாண்புமிகு பி. பி. தேவராஜ்**
*( இந்துசமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் )*

''இந்து கலாசாரம்'' இதழின் நான்காவது ஆண்டு நிறைவினை ஒட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துக்களை அளிப்பதில் மிக்க மகிழ்வடைகின்றேன்.

சமயக் கட்டுரைகளையும், செய்திகளையும் தாங்கிய இதழாக கடந்த ஆண்டுகளில் இந்து கலாசாரம் தவறாமல் வெளிவந்து கொண்டிருக்கிறது. அவ்வப்போது சிறப்புக்கட்டுரைகள், இலங்கை வரும் அறிஞர்களின் பேட்டிகள் என்பன மலருக்கு பெருமை சேர்த்திருக்கின்றன.

கடந்த ஆண்டுகளாக சிறந்த அச்சு வடிவில், வண்ணப்பட முகப்புடன் இந்த இதழ் வெளிவருவது அனைவரையும் கவரத்தக்கதாக உள்ளது. இதனை இந்து கலாசாரம் இதழின் படிமுறை வளர்ச்சி எனலாம்.

ஒரு சஞ்சிகை தொடர்ந்து வெளியிடுவதில் பல சிரமங்கள் உள்ளன. அதுவும் ஆன்மீக சஞ்சிகைக்கு பலவாறான முயற்சிகள் தேவை. அந்த வகையில் தளராத முயற்சியுடன் இந்த இதழை வெளியிட்டுவரும் ஆசிரியர் குழுவினரை மனமாரப் பாராட்டுகின்றேன். குறிப்பாக திரு ஏ. எம். துரைசாமி அவர்களின் பங்களிப்பு வாழ்த்துக்குரியது.

''இந்து கலாசாரம்'' - வாசகர்களின் அபிமானம் மிக்க இதழாக வளர்ந்து தனக்கென ஒரு தனியிடத்தை பெற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

# காலத்தைவென்ற கருத்துமிக்க இந்துகலாசார இதழ்கள் இல்லம்தோறும் இருப்பதாக!




சிவநெறிச் செல்வர், சிவநெறிச்செம்மல்
சமாதான நீதவான், அறங்காவலர்
**தி. செந்தில்வேள்**


இந்து கலாசார விருட்சத்தில் பூக்கள் மலர்ந்த வண்ணம் இருக்கின்றன. நான்கு ஆண்டுகள் ஆண்டுக்கொரு அருமையான மலராக மலர்ந்து, திங்கள் தோறும் விரிந்த இதழ்கள் ஆத்மீக மணம் பரப்புவதை நுகர்கிறேன். பாரம் பரிய சமயாசாரத்தின் அழகைக் காண்கிறேன். அம்மலர் களுக்குள்ளே, முழுச்சமுதாயமுமே மலர்ச்சிபெறவைக்கவல்ல வழி வழி வந்த மெஞ்ஞான அருந்தவத்தேன் இருப்பதை உணர்கிறேன்.

சாதாரண சஞ்சிகை மலர்கள் சருகாவது சரித்திரம். ஆயின் இந்து கலாசார சஞ்சிகை மலர்களின் இதழ்களோ காலத்தால் மணம் குணம் சற்றேனும் குறையாது, காலத்தை வென்ற கருத்து மிக்க இதழ்களாக இல்லங்கள் தோறும் ஆத்மீக விழிப்புணர்ச்சியைச் சந்ததிகள் தோறும் தோற்று வித்துக் கொண்டே இருப்பதாக என வாழ்த்து கிறேன்.



# வாழ்த்துரை

திருமதி க. ஆழ்வாப்பிள்ளை
(தலைவி - கொழும்பு இந்து மகளிர் மன்றம்)

இந்தக் கொழும்பு மாநகரில் இந்து சமயத்தையும் அதன் கலாசாரத்தையும் பேணி வளர்க்கும் எண்ணத்தோடு ஆரம்பிக்கப்பட்ட இந்த திங்கள் இதழிற்கு வயது மூன்றாகி விட்டதென அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். இதில் பல நல்ல கருத்துள்ள விஷயங்கள் வெளிவருவதால் அதை வாசிப்பதற்கு ஆவலுடன் காத்திருப்பேன். இப்படியான பத்திரிகையை இந்துக்கள் யாவரும் கூடியளவு ஆதரித்து அதன் வளர்ச்சியில் ஆர்வம் காட்ட வேண்டும். மேலும் பல சந்தாதாரரைச் சேர்த்து ஊக்கமளிக்குமாறு யாவரையும் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்து கலாசாரம் நல்ல சமய சமூக பணிகளைச் செய்து நீடூழி காலம் நிலைக்க வேண்டுமென பராசக்தி அருள் புரிய பிராத்திக்கின்றேன்.

---

# சிவநந்தி அடிகளாரின் சிந்தனை

அண்மையில் தமிழகம் செல்லும் வழியில் சில தினங்கள் இலங்கையில் தங்கியிருந்த லண்டன் மெய்கண்டார் ஆதீன குருமுதல்வரும் உலக சைவப் பேரவையின் செயலாளர் நாயகமுமாகிய தவத்திரு சிவநந்தி அடிகளார் அவர்களைக் காணவும் அவரது கருத்துக்களைக் கேட்கவும் வாய்ப்புக் கிடைத்தது.

அடிகளார் லண்டனில் வாழ்ந்தாலும் சைவத் தமிழராக வாழ்பவர். செல்வங்கொழிக்கும் பூமியிலும் சைவச் சிந்தனை பரவ வேண்டும் என்ற உயரிய எண்ணத்துடன் பணிசெய்பவர்.

அடிகளார், இந்து சமய கலாசார அமைச்சு ஏற்பாடு செய்திருந்த இந்து மதப் பேருரையில் சைவத்தின் எதிர்காலம் பற்றி ஆற்றிய உரை பலரது சிந்தனைக் கண்களையும் திறப்பதாக அமைந்திருந்தது.

மேற்குலகம் ஆன்மீகம் நாடி கிழக்கு நோக்கிப் படையெடுக்கும் இந்தக் காலகட்டத்தில் மேற்கே வாழ்வின் வளம் தேடிச் சென்று வாழும் தமிழ் மக்கள் — சைவ மக்கள் — எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றி அடிகளார் தெரிவித்த கருத்துகளும் அவரது கவலையும் நியாயமானவை.

மேற்கே இப்போது சைவ மக்கள் வாழும் இடந்தோறும் ஆலயங்கள் தோன்றி வருகின்றன. தவறாமல் பூஜைகளும் நடைபெறுகின்றன. ஆகம விதிப்படியான கிரியைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

ஆயினும் இந்தப் பூஜைகளிற் பெற்றோருடன் பங்கு கொள்ளும் இளைய சைவத் தலைமுறையினருக்கு ஒன்றுமே புரிவதில்லை. அர்ச்சகர் ஓதும் மந்திரம் புரிவதில்லை. கிரியைகளுக்கான காரணங்களும் புரிவதில்லை. இவற்றை விளக்கத்தக்க அளவு பெற்றோரும் சமய அறிவு உடையவர்களாக இல்லை.

எனவே, இந்த நிலை நீடித்தால் ஆங்கில மயமான சூழலில் வாழும் இளைய சைவ சமுதாயம் எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்துவிட்டு போகும் நிலை வளருமே தவிர நாம் காலங்காலமாகப் போற்றிக் காத்த சைவப் பாரம் பரியம் நிலை கொள்ளாது.

இந்த நிலை மாறவேண்டுமானால், சில நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.


உலக சைவ மக்கள் அனைவருக்கும் பொதுவான ஒரு பொது நூல் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்பட வேண்டும். அந்நூல் நமது சந்தேகங்கள் அனைத்தையும் தீர்ப்பதாக இருக்க வேண்டும்.

தேவார, திருவாசகங்கள் பாடி தமிழில் அர்ச்சனை செய்தால் மொழி புரியும்! இறையுணர்வுடன் ஒன்றும் நிலை ஏற்படும். எனவே ஆலயங்களில் தமிழில் அர்ச்சனை செய்வதை நாம் ஊக்குவிக்க வேண்டும்.


இங்ஙனம் சில அடிப்படையான திட்டங்களை உலக சைவப் பேரவை முன்னெடுத்துச் செல்கிறது. பல நாடுகளில் உள்ள அதன் கிளைகள் ஆதரவு நல்க முன்வந்துள்ளன.

என விளக்கிய அடிகளார் ஆயிரம் தரம் பேசுவதைவிட ஒரு சிறு பணியையாவது ஆற்றுவது சிறந்தது எனக் குறிப்பிட்டார். அடிகளாரின் கருத்துக்கள் அர்த்தம் மிக்கவை. உலகளாவிய சைவம் என்ற ரீதியில் எண்ணப்பட வேண்டியவை.

அவர்தம் கருத்துக்களுக்கு முன்னுரிமை தந்து செயல் வடிவம் கொடுக்க வேண்டியது சைவத் தமிழர்களின் கடமை. உலக சைவப் பேரவைக் கிளைகள் இந்தப் பணியினை முனைந்து செயல்படுத்த வேண்டும் என விழைகின்றோம்.



1



2



3

1 அமைச்சின் கேட்போர் கூடத்தில் தவத்திரு சிவநந்தி அடிகளாரின் பிரசங்கத்தை செவிமடுப்போர்

2 ஸ்ரீ முருகன் கோவில் பாரிஸில் சுவாமி சுப்பிர முனியா சுவாமிகளுடன் நடராஜ சுவாமிகள்

3 உலக சைவப் பேரவையின் இலங்கை ஆலோசனைச் சபை இலங்கை அநாதை இல்லங்களுக்கு நன் கொடைகள் வழங்குவது பற்றி ஆலோசிக்கப்பட்ட போது.



1



2



3

1. தவத்திரு சிவநந்தி அடிகளார் இந்து சமயகலாச்சார இராஜாங்க அமைச்சில் வர வேற்கப் பட்ட போது, அமைச்சர், செயலாளர் திரு. தயாபரன் ,உதவிப் பணிப்பாளர்கள் சாந்தி நாவுக்கரசன், குமார் வடிவேலு ஆகியோர்.

2. கல்கண்டு ஆசிரியர் திரு. லேணா தமிழ்வாணன் அவர்களுக்கு இந்து கலாச்சார ஆசிரியர் திரு.ஏ.எம். துரைசாமி அவர்கள் இந்து கலாச்சார இதழை வழங்கிய போது.


3. உலக சைவப் பேரவையின் இலங்கை ஆலோசனைச் சபையின் நன் கொடையை பெற்றுக் கொண்ட திருகோணமலை சண்முகா மகளிர் இல்ல நிர்வாக செயலாளர் செல்வி நடராசா அவர்கள் உரையாற்றும் போது



1



2



3


1. இலங்கையில் வாரியாரின் இறுதி சொற் பொழிவு பேலியா கொடை ஸ்ரீ பூபால விநாயகர் கோயிலில் நடை பெற்ற போது, ஆலய அறங்காவலர் சிவநெறிச் செல்வர் தி. செந்தில்வேள் அவர்கள் மலர் மகுடம் சூட்டி வரவேற்கும் காட்சி

2. ஸ்ரீ கணேசாநந்த மகாதேவா சுவாமிகள் திருமுறை பண்ணுடன் ஓத பயிற்சியளிக்கிறார்.


3. ஔவை நடராஜன் அவர்கள் முனைவராக உள்ள தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம்



உலக சைவப்பேரவையின் இலங்கை ஆலோ சனைச் சபையின் விசேட கூட்டம் 8.2.94ல் இந்து கலாசார அமைச்சில் அதன் தலைவர் திரு. தயாபரன் தலைமையில் நடைபெற்றது. விசேட அதிதியாக உலக சைவப்பேரவையின் செயலாளர் நாயகம் தவத்திரு சிவநந்தி அடிகளார் கலந்து கொண்டார். அக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஏனைய உறுப்பினர்களும் காணப்படுகிறனர்.



அண்மையில் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட திரு.கே. பொன்னுத்துரை அவர்கள் சிறந்த சமூக சேவையாளர். இந்து கலாசார இதனை மலையகத்தில் பிரபல்யப்படுத்தியவர் இவருக்கு எமது வாழ்த்துக்கள்.



இந்தியாவில் மிகப் பிரபல்யமடைந்த அனுமானின் சிலை

# சைவமும் தமிழும் வளர உதவுங்கள்!

## ''லண்டன் மெய்கண்டார் ஆதீன முதல்வர் சிவநந்தி அடிகளார் வேண்டுகோள்''

—பண்டாரவளை அன்புச்செல்வன்—

''உலகின் நாடுகள் பலவற்றிலும் தமிழ்ச் சைவ மக்கள் பரந்து வாழ்கின்றனர். அங்கெல்லாம் தமிழும் சைவமும் தழைக்க வேண்டுமென உலக சைவப் பேரவை அரும்பாடு படுகின்றது. எனவே, இலங்கை சைவத் தமிழ் மக்கள் நிறைந்த பூமி என்ற முறையில் உங்களால் ஆன உதவிகள் அனைத்தையும் செய்து எமது பணிகளுக்கு ஆதரவளியுங்கள்''

இவ்வாறு அண்மையில் தமிழகம் செல்லும் வழியில் இலங்கையில் சிலதினங்கள் தங்கி இருந்த லண்டன் மெய்கண்டார் ஆதீன முதல்வரும், உலக சைவப் பேரவையின் செயலாளர் நாயகமுமாகிய தவத்திரு சிவநந்தி அடிகளார், இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சின் கேட்போர் கூடத்தில் ''சைவத்தின் எதிர்காலம் '' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றும்போது குறிப்பிட்டார்.

இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் இந்துசமயத் திணைக்களப் பணிப்பாளர் திரு க. சண்முகலிங்கம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளைத் தலைவரும், இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சின் செயலாளருமான திரு கா. தயாபரன் அவர்கள் அடிகளாருக்கு மலர் மாலை அணிவித்து வரவேற்றார். இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் அடிகளாருக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

சிவநந்தி அடிகளார் தொடர்ந்து பேசுகையில் நாம் சைவப் பாரம்பரியத்திலே வளர்ந்தவர்கள், தமிழர்களின் சைவசித்தாந்தக் கருத்துக்கள் உயர்ந்த ஆன்மீகத் தத்துவங்களை உள்ளடக்கியவை. திருமூலர் திருமந்திரம் மிகச் சிறந்ததமிழ்ப் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

ஆயினும் இன்று மேற்குலகிலே நிரந்தரமாகவும் தற்காலிகமாகவும் குடியேறி வாழ்கின்ற தமிழ் மக்கள் தமது பலநூற்றாண்டு கால சைவப் பாரம்பரியத்தை பேண விரும்புகின்றனர். எனினும், இவர்களின் புதல்வர்களும், புதல்விகளும் மேற்குலகின் நாகரிகத் தாக்கங்களுக்கு உட்பட நேர்கிறது.

அங்கேயும் நிறைய ஆலயங்கள் இருக்கின்றன. பூஜைகள் நடைபெறுகின்றன ஆனால் இன்று லண்டனில் வாழும் ஒரு சைவச் சிறுமி, தனது தந்தையிடம், ''ஏன் கடவுளின் சிலைக்கு பால் ஊற்றுகின்றார்கள்'' என்று ஆங்கிலத்தில் கேட்கும் போது அந்த தந்தையாரே முறையான பதில் சொல்ல முடியாமல் திகைக்கும் நிலையில் உள்ளார்.



— சிவநந்தி அடிகளார் —

இந்தக்குறைகளைப் போக்கவும் உலகின் சைவ மக்களிடையே ஒரு ஒருங்கிணைப்பை ஏற்படுத்தவும் உலக சைவப் பேரவை முன்வந்துள்ளது. இதன் பிரதான அம்சமாக நாம் பல நாடுகளில் பேரவையின் கிளைகளை ஆரம்பித்துள்ளோம். இலங்கைக் கிளையின் தலைவராக திரு. தயாபரன் அவர்களும், செயலாளராக திரு. துரைசாமி அவர்களும் அரிய பணிகளை ஆற்றுகின்றனர்.

இலங்கை வாழ் சைவத்தமிழ் மக்கள் எமது பேரவைக்கு பூரண ஆதரவு தரவேண்டும் என வேண்டுகின்றேன்.

இப்போது பேரவை பிரதானமாக மூன்று முக்கிய கடமைகளை மேற்கொண்டுள்ளது. முதலாவதாக உலக சைவ மக்கள் தமது சமய அறிவைப் பூரணப்படுத்திக் கொள்ளத்தக்க விடயங்கள் அனைத்தும் அடங்கிய நூல் ஒன்றை வெளியிடுதல், உலகின் சைவ ஆலயங்கள் தோறும் தமிழில் அர்ச்சனை செய்யத் தூண்டுதல், சைவ மக்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்துவதன் மூலம் நலிந்தோர்,

# தமிழ் மொழிக்கு ஒரு கலைக்கோயில்

— கலைச்செல்வி தஞ்சை —

பெருமைமிகு பாரதத்தின் தமிழகத்தில் பொன்னி நதியின் புதுப்புனலில் தஞ்சை மண்ணில் ஒருபுறம் நன்செயும் புன்செயும் கொழிக்கின்றன. மறுபுரம் கவின்கலைகளும் பண்பாடும் விளைகின்றன.

மாமன்னன் இராசராசன் கட்டிய பெரிய கோயிலும், மராட்டியர் அரண்மனையும்' சரசுவதி மகால் நூலகமும் மட்டுமே தஞ்சைக்குப் பெருமை என்ற நிலையை மாற்றித் ''தமிழுக்குத் தஞ்சை'' என்று உலகத்தமிழர்களின் கவனத்தையெல்லாம் எதிர்பார்ப்பையெல்லாம் இன்று ஈர்த்து நிற்கும் கலைக்கோயில் தான் தமிழ்ப் பல்கலைக்கழகம்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அமைப்பும் செயலாண்மையும் பிற பல்கலைக்கழகங்களை ஒத்திருந்தாலும் அதன் குறிக்கோள்கள் பிற பல்கலைக்கழகங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை.

தமிழ் மொழி இலக்கியத்திற்கு அவற்றின் ஆய்வுகளுக்கு இது ஓர் உயராய்வு மையம்.

கடல் கடந்து வாழும தமிழர்களுக்கும் தமிழ் நாட்டிற்கும் இது ஒரு பண்பாட்டுப்பாலம்.

இயல், இசை, நாடகம், ஓவியம், நடனம் முதலான நுண்கலைகள் சிறந்து விளங்கும் தஞ்சை மண்ணில் அமைதியான சூழலில் 1000 ஏக்கர் நிலப் பரப்பில், தொன்மையும் புதுமையும் சார்ந்து உலக அரங்கில் தமிழை உயர்த்தப் பாடுபடும் பல்வேறு துறைகளைச் சார்ந்த அறிஞர்கள் பலரைக் கொண்டு திகழ்கிறது தமிழ்ப் பல்கலைக்கழகம்.

தமிழ் மொழிக்கு அணிசேர்க்கும் ஐம்பெருங்காப்பியங்களைப் போன்று தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அணிசேர்ப்பவை ஐந்து புலங்கள். ஐந்து புலங்களுக்குமான கட்டட அமைப்பு 'தமிழ்நாடு' என்ற 5 எழுத்துக்களின் வடிவில் அமைக்கப்பட ஏற்கப் பெற்று 'ழ்' என்ற எழுத்தின் அமைப்பில் அமைந்த எழிலார்ந்த கட்டடத்தின் கண் 'மொழிப்புலம்' செயல் பெற்று வருகிறது. ஒவ்வொரு புலமும் தன்னகத்தே நான்கைந்து துறைகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு துறையிலும் பேராசிரியர், இணைப்பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் பணிபுரிகின்றனர்.

ஐம்புலங்களில் 1) மொழிப்புலம் (2 சுவடிப்புலம் 3) வளர் தமிழ்ப்புலம் 4) கலைப்புலம் 5) அறிவியல் புலம் ஆகியனவாம்.

மொழிப்புலத்தில் இலக்கியத்துறை, மொழியியல் துறை, நாட்டுப்புறவியல்துறை, இந்திய மொழிகள் மையம், தத்துவ மையம், மலைவின மக்கள் ஆய்வு மையம் ஆகியனவும்,

சுவடிப்புலத்தில், ஓலைச் சுவடித்துறை, அரிய கையெழுத்துச் சுவடித்துறை, கல்வெட்டியல் துறை நீரகழாய்வு மையம் ஆகியனவும்.

வளர் தமிழ்ப்புலத்தில், அயல் நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை, மொழிபெயர்ப்புத் துறை. தொகுப்பியல் துறை, சமூகவியல் துறை, அறிவியல் தமிழ் வளர்ச்சித் துறை ஆகியனவும்,

கலைப்புலத்தில், இசைத்துறை, சிற்பத்துறை நாடகத்துறை ஆகியனவும்,

அறிவியல் புலத்தில், சித்தமருத்துவத்துறை, தொல் அறிவியல் துறை, தொழில் மற்றும் நில அறிவியல் துறை, கட்டடக்கலைத் துறை, கணிப்பொறி அறிவியல் துறை ஆகியனவும் அடங்கியுள்ளன.

23 துறைகளுடன் மேலும் களஞ்சிய மையமும், பெருஞ்சொல் அகராதித் துறையும், தூயதமிழ்ச் சொல்லாக்க அகரமுதலிகள் துறையும், சங்க இலக்கியப் பொருட்களஞ்சியத் திட்டமும், நாடகக் களஞ்சியமும் செயல்பட்டு வருகின்றன.

---

வறியோர், பிற்பட்டோருக்கு உதவிகள் செய்தல் ஆகிய பணித்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. நாம் பேசியது போதும் செயல் படுவதே இன்றைய கடமை! அனைவரும் இதற்கு உதவுமாறு வேண்டுகின்றேன்'' எனக் குறிப்பிட்டார்.

அடிகளாரின் உரைக்கு பதிலளித்துப் பேசிய அமைச்சர் தேவராஜ் அவர்கள் தமதுரையில் ''வண்டனில் ஒரு ஆதீனம் அமைத்த முதற்பெருமகன் அடிகளார்! அவரை மனமாரப் பாராட்டுகின்றேன். அவர் ஆதீனம் மூலமாகவும், உலக சைவப் பேரவை மூலமாகவும் இன்றைய காலத்திற்கேற்ற பணிகளை ஆற்றுகின்றார். இது உயர்ந்த காரியமாகும்.

இலங்கையில் உலக சைவப் பேரவையின் பணிகளை முன்னெடுத்துச் செல்வதில் அதன் தலைவர் திரு. தயாபரன் அவர்களும் செயலாளரான திரு ஏ. எம். துரைசாமி அவர்களும் முன்னின்று ஆற்றும் பணிகள் மிகுந்த பாராட்டிற்குரியவை. அவர்களை மனமார வாழ்த்துகின்றேன். எமது அமைச்சு உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளைக்கு பூரண ஆதரவு நல்கத் தயாராக உள்ளது'' எனக் குறிப்பிட்டார்.

---

# உண்மைகள் என்றோ ஒருநாள் விழித்தெழும்!

## விளக்கத்திற்கு ஓர் விளக்கம்

இந்து கலாசாரம் இதழைத் தவறாது ஆர்வத்துடன் வாசிக்கும் அபிமானி நான் கடந்த 1-10-93ல் வெளியான இந்து கலாசார இதழில் ''காலி கடலில் கண்டெடுக்கப்பட்ட சிலை தொடர்பாக அமைச்சர் தேவராஜ் அளித்துள்ள விளக்கம்'' என்ற தலைப்பில் வெளியாகிய அறிக்கையை வாசித்து நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன்.

நான் நினைவு தெரிந்த நாள் முதலாய் காலியிலேயே இருப்பவன். சிவன் கோயிலுக்குத் தினமும் தவறாது செல்பவன். பரிபாலனத்திலும் மிகுந்த ஈடுபாடு உடையவன். தெய்வச் சிலையை தொல்பொருள் நிலையத்தில் சிறைவைப்பது தவறு என்றும் அதனை மீட்டு மீண்டும் காலிச் சிவன் கோயிலில் பிரதிஷ்டை பண்ணி வழிபாட்டுக்கு உரியதாக்கி மரியாதை செய்ய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் கொண்ட சிவநெறிச் செம்மல் செந்தில்வேளின் உள்ளம் அறிந்து முதலில் இருந்தே இவ்விடயத்தில இப்பெரியாருக்கு என்னால் முடிந்த மட்டும் ஊக்கமும் உதவியும் செய்து வருகிறேன்.

தயவு செய்து இந்த விபரமான - விளக்கமான கடிதத்தை பிரசுரிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

● அமைச்சர் அவர்கள், பெப்ரவரி 2ம் திகதி திவயின சிங்கள இதழின் செய்திப்படி சிலையொன்று காலி கடலில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக கேள்விப் பட்டவுடன் காலி பொலிஸ் நிலையத்துடன் தாம் தொடர்பு கொண்டதாகச் சொல்கிறார்.

ஆனால், பெப்ரவரி 2ம் திகதி வெளியிட்ட இச் செய்தி 'திவயின' சிங்கள இதழில் பிரசுரமாவதற்கு முன்பரே 'வீரகேசரி' தமிழ் இதழில் வெளியாகிவிட்டது. அதுமட்டும் இல்லை. ஆங்கில தினசரியான 'ஐலண்ட்' இதழில் 21-1-93 அன்றே இச்செய்தி வெளியாகி இருக்கிறது.

● மேலும், நான் கபினெட் அமைச்சரும் தொல்பொருள் திணைக்களம் சம்பந்தமான கலாசார மற்றும் தகவல்கள் அமைச்சருமான மாண்புமிகு லொகுபண்டாரவை 1-2-93 அன்றும் இச்சிலை சம்பந்தமாக நேரில் சந்தித்தேன். கௌரவ லொகுபண்டார அவர்கள் என் முன் நிலையிலேயே இந்துகலாசார இராஜாங்க அமைச்சரை தொலைபேசியில் அழைத்துச் சிலை விஷயமாகப் பேசினார் மேலும் 1-2-93 திகதியிட்ட பதில் தபாலையும் கௌரவ லொகுபண்டார அவர்கள் எனக்குத் தந்தார்கள்.

● இதுவெல்லாம் இப்படியிருக்க, அதாவது தமிழ் தினசரியான வீரகேசரியிலும், ஆங்கில தினசரியான ஐலண்டிலும் செய்திகள் முதலிலேயே வெளியாகி இருக்கின்றன. ஆனால் சிலை வெளிவந்து மூன்று கிழமைகளின் பின் சிங்கள தினசரியான திவயினவில் 2-2-93 அன்று வெளியான செய்தியிலிருந்தே சிலை விஷயம் தனக்குத் தெரிய வந்தது என்று இராஜாங்க அமைச்சர் தேவராஜ் சொல்கிறார். கௌரவ அமைச்சர் லொகுபண்டார அவர்கள் என் முன்னிலையில் அறிவித்ததையே மறுத்துள்ளமை மிகவும் கவலைக்குரியது

● மேலும், கௌரவ அமைச்சர் லொகுபண்டாரவின் பணிப்பின் பேரில்தான் நாங்கள் தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்பு கொண்டோம். தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் முன் சிலை பற்றிய விபரங்களை விபரமாகக் கலந்துரையாடினோம். மிகவும் பயபக்தியோடு எங்களது உரைகளைச் செவிமடுத்தார். ஆயினும் தனக்குள்ள அதிகாரத்தின்படி சிலையைத் தர தனக்கு இடமில்லை என்றும் ஏப்ரல் முதலாம் திகதி ஆலோசனைக் கூட்டத்திற்கு நாங்களும் வந்தால் மிகவும் நல்லது என்றும் நேரடியாகவே தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் விடுத்த அழைப்பின் பேரிலேயே திரு. செந்தில்வேள் அக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

● மேலும் இச்சிலை விடயத்தில் புதைபொருள் தொடர்பான சட்டவிதிகளின்படி ஆலயத்திற்கு வழங்க விதி இல்லை என்றும் சொல்லியிருக்கிறார். ஆனால் புதைப்பொருளாகக் கண்டெடுக்கப்பட்ட விக்கிரகங்கள் கோணசுவரர் ஆலயத்திற்குக் கொடுபட்டுள்ளன என்பதை ஏன் மறைக்க வேண்டும்.

● மேலும் இச்சிலை சம்பந்தமாக சட்ட நிபுணர்களின் ஆலோசனைகளும் சட்ட நுணுக்கங்களும் பெறப்பட வேண்டும் என்றும் அமைச்சர் தேவராஜ் சொல்லியிருக்கிறார். அவரது அமைச்சிலேயே ஒன்றுக்கு மேற்பட்ட சட்டத் துறையினர் இருக்கிறார்களே!

— எஸ். சிவசுப்ரமணியம்
காலி.

# - காஞ்சிமாமுனிவர் -

— நா. ஹரிதாஸ் —

உலக இந்து மக்கள் அனைவராலும் உன்னதமாகப் போற்றப்படும் உயர்ந்த உள்ளம் படைத்த ஒரே ஒரு மாமுனிவர் தான் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு சந்திரசேகர இந்திரசரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் ஆவர். கோடானுகோடி பக்தர்களைக் கொண்ட மாமுனிவரோ, — எதுவித அலங்காரமோ, ஆடம்பரமோ, கவர்ச்சியோ அன்றில் சபலமோ, ஒன்றுமே இல்லாத எளிமையான தோற்றமும், மிக மிக சாதாரண வாழ்க்கை நடைமுறையும் கொண்ட ஒரு மாபெரும் துறவி. கோடீஸ்வரரானாலும் சரி, உயர்ந்த அரசியல்வாதியாயினும் சரி, ஏழை எளியவனானாலும் சரி அனைவரையும் எதுவித பேத மனப்பான்மையுமின்றி சமத்துவமாக ஒரே பார்வையில் பார்க்கும் ஒரே ஒரு ஆன்மீக துறவி காஞ்சிமாமுனிவரே.

— அப்படிப்பட்ட ஒரு தலைசிறந்த ஆத்மீக ஒளி நட்சத்திரத்தை இந்து உலகு இன்று இழந்து விட்டது.

கடந்த 8-1-1994 சனிக்கிழமையன்று காஞ்சி மடத்தில் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்த வேளை பரமாச்சாரியார் மகா சமாதியடைந்தார்.

இந்துக்களின் சரித்திரத்தில் நீங்கா இடம் பெற்ற தத்துவஞானியான ஆதிசங்கரரால் 8ம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட காஞ்சி மடத்தின் 68 வது பீடாதிபதியாக பொறுப்பேற்ற சுவாமிகளுக்கு அன்று வயது 13 ஆகும்.

சுவாமிகள் பீடமேறி ஞானச் செங்கோல் செலுத்தியவாறு தவக்கோலத்தில் அருளாட்சி செய்ய ஆரம்பித்து எண்பத்தேழு ஆண்டுகள் கடந்துவிட்டன.

தென்னார்க்காடு மாவட்டத்தில் விழுப்புறத்தில் ஸ்ரீ சுப்ரமணிய சாஸ்திரிகளுக்கும் ஸ்ரீ லட்சுமிஅம்மாளுக்கும், 1894ம் ஆண்டு வைகாசிப் பூரணையில் அனுச நட்சத்திரத்தில் மே மாதம் இருபதாம் நாளில் அவதரித்த சுவாமிகளுக்கு அண்மையில் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது.

சுவாமிநாதன் எனும் பிள்ளைத் திருநாமம் இடப் பெற்ற சுவாமிகள் கும்பகோணத்து மடத்திலும், காவிரிக் கரையிலமைந்த மகேந்திர மண்டல பர்ணசாலையிலும் படித்து உருவானார்.

இவர் பர்ணசாலையில் பாலனாயிருந்த காலத்தில் காஞ்சிக் காமகோடி பீடத்து அறுபத்தாறாவது பீடாதிபதியாயிருந்த சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளை மானசீக குருவாகக் கொண்டு ஒழுகினார்.

18 மொழிகளைச் சரளமாகப் பேச எழுத வல்லவரான சுவாமிகள் ஒரு சிறந்த தத்துவ ஞானியுமாவார். இவர் பிரெஞ்சு ஆங்கிலம் உட்பட பல இந்திய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அரவிந்த மகரிஷி, ரவீந்திரநாத் தாகூர் மகாகவி பாரதியார், வினோபாஜி ஆகியோர் சுவாமிகளுடன் நேரடித் தொடர்பு கொண்டிருந்தார்கள். சுதந்திர வீரர் மகாத்மா காந்தி சுவாமிகளை ஒரு மாட்டுக் கொட்டிலில் சந்தித்து ஆசி பெற்றார்.

மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையாரும் சுவாமிகளை தரிசித்து அவரின் ஆசி பெற்று வந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் காஞ்சிக் காமகோடி பீடத்தின் அறுபதாவது பீடாதிபதியாக வீற்றிருந்த சுவாமிகள் உருவாக்கி இலங்கைக்கு அனுப்பியருளிய பெரியார்களே கடையிற் சுவாமிகள், சித்தானைக் குட்டி சுவாமிகள், பெரியானைக் குட்டி சுவாமிகள், நவநாதசித்தர் என்பவர்களாவர்.

மறைந்த பரமாச்சாரியாரின் கருணைக்கு ஆட்பட்ட எங்கள் உமாசங்கரானந்த சரஸ்வதி ஷிஓம்ஷர் சுவாமிகளுக்கு காஞ்சிப் பெரியார், சிவபூமியாகிய எமது இலங்கைக்கு நான்கு சிவலிங்கங்களை கொடுத்தருளியுள்ளார்.

பரமாச்சாரியாரின் வழி நின்று சைவ சமயத்தை தழைக்கச் செய்து சிவகடாட்சம் பெருவோமாக.

---

★ எல்லா மக்களுடைய மனதிலும் ஒரே நேரத்தில் இறைவனின் நினைவு வருவதற்காகவே ஆலயங்களில் பெரிய மணி கட்டி ஓசை எழுப்பப்படுகின்றது. மணி ஓசை கேட்டதும் பழக்கப்பட்ட மனம் இறை வழிபாட்டுக்குத் தயாராகி விடுகின்றது.

— ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்.

---

# அவருக்கு மரணமில்லை

— செ. யோகநாதன் —



அமரர் வே. ந. சிவராஜா

சிலருடைய வாழ்க்கை என்றைக்கும் மற்றவர்களுக்கு வியப்பூட்டுவதாகவும், பார்த்துப் பின்பற்றத் தக்கதாயும், ஒப்பற்றதாயும் அமைந்து விடுகின்றது. உயர்குணம், சான்றாண்மை, தலைமைப் பண்பு தயாள சிந்தை என்பன ஒரு மனிதரிடத்தில் ஒருங்கு சேர அமைவதென்பது அபூர்வமாகிவிட்ட இக்காலத்தில், இத்தகைய குணங்கள் அமையப் பெற்ற ஒருவர் அடக்கமாக வாழ்ந்து, அமைதியாக மறைந்து போயிருப்பது ஈடு செய்ய முடியாத ஒரு இழப்புத்தான்.

இத்தகைய குணங்கள் அமையப் பெற்றவர் அமரர் வே. ந சிவராஜா.

எத்தனையோ சிறந்த மனிதர்களை இலங்கையின் வளர்ச்சிக்கு அளித்த வடமராட்சியில், துன்னாலையில் பிறந்தவர் திரு. சிவராஜா. தகப்பனார் திரு. வே. நடராஜா, பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர். தாயார் திருமதி நல்லநாயகம், பத்து குழந்தைகள், மூவர் பெண்கள், ஏழு ஆண்கள், அவர்களுள் மூத்தவர் இளமைப் பருவமே சுறுசுறுப்பும், கடவுள் பக்தியும், இரக்க குணமும் கொண்டதாக அமையப் பெற்று பிறரால் பாராட்டப் பெறும் தகைமைகள் பெற்றிருந்தார் திரு சிவராஜா.

திரு சிவராஜா இருதயக்கல்லூரியிலும், ஹாட்லிக்கல்லூரியிலும் குறிப்பிடத்தக்க மாணவனாயிருந்தார். ஹாட்லியிலிருந்து பல்கலைக்கழகப் படிப்பிற்கு 1953இல் தேர்வானார். 1956இல் கலையியல் பட்டதாரியாக வெளியேறினார்.

பட்டதாரியாக வெளியேறிய இவர் 1956—57 காலப் பகுதியில் யாழ் மத்தியக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார். 1957 பிற்பகுதியிலேயே டி. ஆர். ஓ. பரீட்சையில் வெற்றி பெற்றார். பயிற்சிக்கால நியமனமாக (Training Appointment) மட்டக்களப்பிற்குச் சென்றார்.

டி. ஆர். ஓ. வாக முதல் நியமனம் பெற்று, மன்னார் நானாட்டானிற்குச் சென்றார். உற்சாகமும் கனிவும் எதையும் ஒழுங்குறச் செய்யும் திறனும் கொண்ட இந்த இளைஞர், அந்தப் பகுதி மக்களின் நல்லபிமானத்திற்கு வெகு விரைவிலேயே ஆளானார். தங்களின் உன்னதமான அன்பராகவே மக்கள் இவரைக் கருதினார்கள். நானாட்டானில் அமைந்த ஒரு பாடசாலைக்கு இவர் மேல் கொண்ட அன்பின் அடையாளமாக 'சிவராஜா வித்தியாலயம்' என்றும் பெயர் சூட்டி மகிழ்ந்தனர்.

1959இல் இலங்கை சிவில் சேர்விஸ் (Ceylon Civil Service) பரீட்சையில் தேறி திருகோணமலையில் உள்ளூராட்சி உதவி ஆணையாளராக (A.C.L.G.) நியமனமானார். இதே பதவியோடு வவுனியா, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய இடங்களில் சிறந்த சேவை ஆற்றினார்.

திருகோணமலையில் 1960இல் (A.C.L.G.) நியமனம் பெற்றபொழுது திரிகோணமலையில் பணியாற்றிய காலத்தில் சிவயோக சமாஜத்தின் தொடர்பும் உண்டாயிற்று. அதன் நிறுவனராகிய சுவாமி கெங்காதரானந்தாஜீயின் பணிகளில் பக்கபலமாக நின்று சமாஜ வளர்ச்சிக்கு உதவியதை இவர் தனது பெரும் பாக்கியமாகக் கருதினார்.

1966இல் இவருக்கு ஆஸ்திரேலியாவுக்கு செல்லும் புலமைப் பரிசில் கிடைத்தது. அங்கிருந்து திரும்பியதும் உள்ளூராட்சி அமைச்சிலேயே கொழும்பில் உள்ளூராட்சி உதவி ஆணையாளராகப் பதவியேற்றார்.

1967 பெப்ரவரி முதலாம் திகதி திருக்கேதீஸ்வரத்தில் இவரது திருமணம் நிகழ்ந்தது. இளவாலையின் சிறந்த குடும்பத்தைச் சேர்ந்த கோகிலாம்பாள் இவரின் வாழ்க்கைத் துணைவியானார் மனமொத்த இனிய தாம்பத்யமாக அமைந்தது. இவர்களின் வாழ்க்கை. தன் குடும்பத்தை மட்டுமன்றி, தன் உடன் பிறந்தவர்களையும் மேனிலைக்கு கொண்டு வருவதில் மிகுந்த அக்கறையும் ஆர்வமும் காட்டினார் இவர். நேர்மையும், இரக்கமும், ஒழுங்கும் எப்போதும் இவர் செயல்களில் அடிநாதமாக மிளிர்ந்தன.

1967 - 1970இல் அரச கரும மொழித் திணைக்களத்தில் இவர் ஆற்றிய பணி மிகவும் பயன் நிறைந்தது. தமிழ் மொழி பெயர்ப்பு வேலை உற்சாகமாக நடந்த காலப் பகுதி இது.

1974 மே - யூலை மாதங்களில் யப்பானுக்கும், 1975இல் டெல்லிக்கும் தன் பணி சம்பந்தமாக இவர் பயிற்சி பெறச் சென்றார். 1979இல் இங்கிலாந்துக்கும் பணி நிமித்தம் சென்று திரும்பினார்.

1979இல் இந்துக் கலாசார அமைச்சின் முதல் பணிப்பாளராகி, அதை ஒழுங்கமைத்து உருவாக்குவதில் பெருங்கவனம் செலுத்தினார். ஓய்வின்றி உழைத்து அதைச் சாதித்தார். 1981 தையில் மதுரையில் நிகழ்ந்த உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டிலும் பங்கேற்றார். இதே ஆண்டிலேயே நிதியமைச்சிற்கு மூத்த உதவிச் செயலாளராகச் சென்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளராக 1983இல் நியமிக்கப்பட்ட இவர், தனது தலைமைப் பண்பை முழுமையாக நிரூபித்தார். சிக்கலும் பல பற்றாக்குறைகளும் நிறைந்த காலப்குதியில், தன்னுடைய நிதானமும் அனுபவமும் வாய்ந்த பணித்திறனால் ஒப்பற்ற முறையில் பல்கலைக்கழகம் செயல்பட உறுதுணையானார்.

ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற பொது நலவாய நாடுகளின் பல்கலைக்கழக மகாநாட்டில் இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பிரதிநிதியாக இவர் பங்கேற்றார்.

1983 - 1988 வரை யாழ் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய காலத்தில் அங்குள்ள பரமேஸ்வரன் ஆலயத்திற்கு ஒரு கோபுரம் அமைக்க முயற்சி எடுத்து அதில் வெற்றியும் கண்டார். 1972இல் M.P.A. (Master of Public Administration) பட்டம் பெற்றார்.

1-9-1990இல் இவர் அரச பணியிலிருந்து ஓய்வு பெற்றார். ஆனால் அது பெயரளவிலான ஓய்வாகவே இருந்தது.

இதே ஆண்டில் பொது நிர்வாக மாகாண சபைகள் அமைச்சின் ஆலோசகராகப் பணியேற்றார். பின்னரும் இவர் ஓயவில்லை. பொது நிர்வாக அதிகாரிகளுக்கு பகுதி நேர விரிவுரைகள் செய்து அவர்களை நெறிப்படுத்த உதவினார். இவரது சோர்வறியா அர்ப்பணிப்பான உழைப்பு வடகிழக்கு மாகாண சபைக்கு கிடைத்தது இதன் முதலாவது தலைமைச் செயலாளராக அமர்ந்து இவர் ஆற்றிய பணி சொல்லில் அடங்காது. விடாப்பிடியாக அரசிடம் போராடி பெறக்கூடிய எல்லா வளங்களையும் பெற்று இச்சபையை உயிர்ப்புடன் இயங்க வைத்தார். தன் காலத்தில் வேலையற்ற படித்த இளைஞர்களுக்கு இவர் உருவாக்கிக் கொடுத்த வேலைவாய்ப்பு, தமிழ்ச் சமூகம் என்றும் மறக்க முடியாத ஒன்று.

பணியிலிருந்தபோதே ஆத்மீகத் துறையில் இருந்த நாட்டம், பதவியிலிருந்து ஓய்வு பெற்றதும் மேலும் விரிவு பெற்றது. 1993 செப்டம்பர் 11, 12, 18, 19 ஆம் திகதிகளில் கல்கத்தா மாநாட்டுக்கு, ஸ்ரீராம கிருஷ்ண மடத்தவருடனும் குழுவினருடனும் தன் துணைவியாருடனும் பயணமானார் இவர். உலக சமய மகாநாடு 1893இல் சிக்காக்கோவில் நடைபெற்ற போது அதில் சுவாமி விவேகானந்தர் இந்து சமய மேன்மை பற்றி பிரசங்கம் செய்தனர். அதன் நூற்றாண்டு நினைவாக இம்மகாநாடு நடைபெற்றது 1993இல் ஆரம்பமான பயணம் பேலூர் மடம், சுக்கினேஷ்வர், கமார்பூர், ஜயராம்பட்டி காசி, அலகபாத், திரிவேணி சங்கமம் வரை 15-9 93 வரை நீடித்தது. 16-9-93இல் பயணத்தை முடித்துக் கொண்டு நிறைந்த மனதுடன் சென்னை திரும்பினார். நோய் உபாதை அப்போதே தொடங்கிற்று வந்ததும் நண்பர் செ. கணேசலிங்கன் உதவியோடு வடபழநி விஜயா மருத்துவமனையில் சேர்ந்தார். தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. உறுதியான மனதோடு சகித்துக் கொண்டார். நம்பிக்கையோடிருந்தார். சிகிச்சை பலனளிக்காமல் 28-9-93 அதிகாலை 3மணிவரை இறைவனடி சேர்ந்தார்.

அவரின் வாழ்க்கை எப்போதும் சளையாத உழைப்பாக இருந்தது. அவர் மனமும், செயலும் தூய்மையும் அர்ப்பணிப்பும் கொண்டவை. மிக எளிமையானவர் அவர். மலை போன்ற உறுதியும் தனக்குச் சரியெனத் தெரிந்தவற்றை செய்து முடிக்கிற ஆர்வமும் அவரின் பிறவிக்குணம். அவர் யாரையும் வெறுத்ததில்லை. ஆனால் தவறான எதற்கும் அவர் உடன் போனதில்லை. அவற்றிலிருந்து முற்றாக விலகிக் கொண்டார். இதுவே அவரின் எதிர்ப்பைத் தெரிவிக்கும் இயல்பு. அவர் ஒரு ஆன்மீகவாதி மானிட நேயம் கொண்டவர். இவற்றை வாழ்நாள் முழுதும் கைக் கொண்டு நிறைவான வாழ்வு வாழ்ந்தவர்.

அவருக்கு என்றும் மரணமில்லை.

---

சிந்திக்க நேரத்தை செலவிடு
அதுவே சக்தியின் உற்பத்தி ஸ்தானம்.
படிக்க காலத்தை செலவிடு
அதுவே விவேகத்தின் மூலம்.

---

# சமுதாயப் பார்வையோடு சமயப்பணியாற்றிய

# புரட்சித்துறவி

— தமிழோவியன் —

புதிய போக்கில் நாட்டம். காலத்தோடு ஒட்டிய புதுமைகளை ஏற்றுக்கொள்ளும் அறிவியல் நோக்கம். எதிலும் பொதுமை வேகம். இப்படி எதிலுமே முன்னணியான மாநிலம் இந்தியாவில் மேற்கு வங்காளமாகும். இதனை அமெரிக்க சமய அறிஞர்களும், உலக மதப் பேராளர்களும் - பெரும்பணியாளர்களும் உணர்ந்துகொள்ள வைத்ததே, 1893ம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் அமெரிக்காவிலுள்ள சிக்காகோ நகரில் நடந்த உலக மதங்கள் மாநாட்டில் விவேகானந்தர் ஆற்றிய ஆங்கில உரையாகும்,

''அமெரிக்கா வாழ் சகோதரர்களே!, சகோதரிகளே!'' — என அவர், சர்வமத மாநாட்டிலே தன் சொற்பொழிவை முதலில் தொடங்கியதை, அன்று முதல், இன்றுவரை இணையற்ற செயலாக, இந்து சமயத்தினர், இந்தியாவிலும், இலங்கையிலும் போற்றி வருகின்றோம். அதனைக் கொண்டாடும் முகமாக நூற்றாண்டு விழாவும் இந்த 1993ம் ஆண்டு செப்டெம்பர் தொடக்கம் தொடராகக் கொண்டாடி வருகின்றோம். இச்செயல் பாராட்டுக்குரியதுதான்.

எனினும் இப்பாராட்டு விழாக்களில்,விவேகானந்த அடிகளாரின் பெருமை பேசப்பட்டதைப் போல், அப்புரட்சித் துறவியாரின் ''புனித நோக்கங்களை நிறைவேற்றி விட்டோம்!'' என்று மார்தட்டி முழங்க முடிந்ததா? அவர் காணமுயன்ற ''சமர்தர்ம - சமத்துவ இந்து சமுதாயத்தை உருவாக்கி விட்டோம்!'' என்று நம்மால் அந்த மாநாடுகளிலே எடுத்துக் காட்டி, இறுமாப்பு கொள்ள முடிந்ததா? ''ஏற்றதாழ்வு என்பதே இந்து சமயத்தில் அறவே இருக்கக் கூடாது'' - என்றும் அந்த துணிவு மிக்க சமயத் துறவியின் சங்கநாதத்தின், ''விண்ணப்பம் நிறைவு செய்யப் பட்டு விட்டது!'' - என்று, எவராலும் அந்த நூற்றாண்டு விழாவில் சங்கநாதம் செய்ய முடிந்ததா? இதற்கு......

''இல்லை!'' - என்பதன் அறிகுறியாக அனைவரும் மௌனம் சாதிப்பதையே நாம் காணமுடியும். இன்னும் வேற்றுமைகளை முற்றாக மாற்ற முடியா விட்டாலும், பெருமளவாவது அகற்றி விட்டோம் என்று எடுத்துக் காட்டிட எம்மால் இயலாது. அது ஏன்? நமது இந்துசமயம் இன்னும் மக்களின் அன்றாட வாழ்வோடு பின்னிப் பிணையவில்லை என்பதை இங்கே நாம் குறிப்பிட்டுக் காட்ட வேண்டியது, வேதனைக்குரிய ஒன்றாகும்.



விவேகானந்த அடிகளார்

ஒரு நூற்றாண்டிற்கு முன்னும் நடந்த சர்வசமய மாநாட்டில், சுவாமி விவேகானந்தர் கலந்து கொள்ளும் அநுமதியோ, நிதி வசதியோ, முன்னேற்பாடோ இல்லாத ஒரு நிலையில், அவர் சிக்காகோ நகரில் நின்றார் என்பதை அறியும்போது, அந்தப் புனிதத் துறவியாரின் மனோவலிமையை எண்ணி வியப்பே ஏற்படுகின்றது.

அடிகளாரை மிகவும் சிரமத்தோடும், சிரத்தையோடும், ஜே. எச். ரைட் என்ற ஹாவார்ட் பல்கலைக் கழகப் பேராசிரியர்தான், உதவி செய்து அம்மாநாட்டில் கலந்து கொள்ள வைத்துள்ளார்; என்ற செய்தியை இன்று எத்தனை பேர்கள் அறிந்து இருப்பார்கள்? வீரமும் தீரமும் மிக்க, இளைஞர்கள் அணிதிரள வேண்டும். விடுதலை பெற்ற பாரதத்தை உருவாக்க இந்த அணி விரைந்து போராட வேண்டும் என்று வீர முரசு (வீரமுரசு) கொட்டிய விவேகமும் - வேகமும் நிறைந்த சுவாமி விவேகானந்தரை முழுமையாகத் தெரிந்து' நடந்து கொள்பவர்கள் எத்தனை பேர்கள்?

'சமயம் என்பது' சாதாரணமக்களால் கொஞ்சங் கூட (நூலண்டறக் கலக்க முடியாத)- கைக்கொள்ள முடியாத சடங்குகளின் அமைப்பு''

''மக்களுக்குப் புரியாத - மயக்கந் தரும் உபதேசங்களை ''தத்துவம்'' எனும் போர்வையில் கூறுவது தான் இந்து சமயம்.''

- என்றும் ஏழைகளுடனும், சமுதாயத்தின் அடிமட்டத்தினருடனும் இணையாத சமயமே இந்து சமயம் என்ற நிலையை மாற்றிட, விவேகானந்த அடிகளார் தனது சமயத் தொண்டின் மூலம் போராடினார் என்பதை அவரது பேச்சு தெளிவு படுத்தும்.

''மதம் இந்தியாவின் அவசரத் தேவை அல்ல.'' - என்று கூறிய அப்பெருமகனார், ''பசியால் வாடிடும் மக்களிடம் சென்று, மதப் பிரச்சாரம் செய்வது அவர்களை அவமதிப்பதாகும். '' - என்று, ஏழ்மை இந்தியாவின் அன்றைய அவசரத்தேவையை எடுத்தியம்பினார். ''பசி வந்திடப் பத்தும் பறந்திடும்.' என்பதை அவர் நன்கு உணர்ந்து, அதன் தாக்கத்தைப் போக்கலே சமயத் தொண்டாற்றினார்.

''கடவுளை மனிதனில் காண்பது தான் வேதாந்தத்தின் நோக்கம். இதுவே உண்மையான கடவுள் தரிசனம். மனிதனே எல்லாவற்றிலும் மிகவும் மகத்தானவன்.'' – என்று, அன்று உலக மதங்களின மாநாட்டு மேடையிலே அவரால் உரக்க குரல் எழுப்ப முடிந்ததற்கு காரணம், ''மக்களுக்கும் மதங்களுக்கும் தொடர்பு எட்டி இருந்ததே'' - என்பதை உணர வேண்டும்.

''வீர இளைஞருக்கு...'' என்ற சிறு நூலில் அவர் கூறியுள்ள கருத்துரைகள், அனைத்தும் சிந்திப்பார்க்கு விருந்தானது. சமயப் பணிபுரியும் வாலிபர்களுக்கு வழிகாட்டும் கைநூல் என்பதும் அதுதான். செம்மை வழி நாடி செயல்படத் தூண்டும் அது.

சில மதப் போதகர்கள் காலையிலும், மாலையிலும், அரிய மானிட குலத்தை ''பாவிகள் கூட்டம்'' எனறும்; அவர்களை ''பாவங்களிலிருந்து மீட்டு எடுப்பவர் ஆண்டவர்!'' என்றும் - பிரசங்கம் செய்வதைக் கேட்டிருக்கின்றோம்.

இப்படி மனிதகுலத்தை ''பாவிகள்'' எனச் சொல்வதை விவேகானந்தர் ஏற்றுக் கொள்ளவில்லை. வெறுத்தார். நேருக்கு நேராகவே எதிர்த்தார். அதனால் தான் ஒரு நூற்றாண்டின் முன்னே சிக்காகோ மாநாட்டில், ''எல்லையற்ற பரமானந்தத்தின் குழந்தைகளே! உயர்வான நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களே! உங்களையும்தான்! இந்துவானவன் உங்களை பாவிகள் என்று அழைக்கமாட்டான். நீங்கள் இறைவனின் பிள்ளைகள், எல்லையற்ற பரமானந்தத்தைப் பகிர்ந்து கொள்பவர்கள். தூய்மையும் நிறைவும் கொண்ட உயிர்கள்: வையகத்தில் வாழும் தெய்வீகச் சுடர்கள் நீங்கள்! நீங்கள் பாவிகள் அல்ல! ஒரு மனிதனை அவ்வாறு அழைப்பது தவறு. அது மனிதத்துவம் மீதான மாறாத அவதூறு.'' - என்று ஆர்ப்பரித்தார். வாழ்வில் நம்பிக்கையும், விருப்பமும் உள்ள இளைய சமுதாயத்தையே அடிகளார் விவேகானந்தா காண விழைந்தார். அதையே இலட்சியமாகக் கொண்டு சேவை செய்தார்.

''தைரியம் மிக்க இளைஞர்களே! நீங்கள் அனைவரும் மகத்தான காரியங்களைச் சாதிப்பதற்காகப் பிறந்தவர்கள் என்று நம்புங்கள்.''

''சாதி ஏற்பாடு வேதாந்த மதத்திற்கு விரோதமானது. சாதி என்பது சமயத்துறையில் கிடையாது. - என்று சமத்துவம் கோரும் அடிகளார் விவேகானந்தர்.

''கடவுள் ஒவ்வொரு உயிரிலும் குடிகொண்டிருக்கிறார். இதைத் தவிரத் தனியாக வேறுகடவுள் இல்லை.''

ஆண்டவனைத் தேடி நீங்கள் எங்கே போகிறீர்கள்? துன்பப்படுபவர்கள், ஏழைகள், பலவீனர்கள், அத்தனையும் தெய்வ வடிவங்களே அல்லவா? ஏன் முதலில் இவர்களை ஆராதிக்க கூடாது?

''...இந்த ஏழைகளையே உங்கள் கடவுளாகக் கொள்ளுங்கள். அவர்களைப் பற்றிச் சிந்தியுங்கள் அவர்களுக்குத் தொண்டு செய்யுங்கள். அவர்களுக்காக இடைவிடாமல் பிரார்த்தனை செய்யுங்கள். அப்போது ஆண்டவன் உங்கட்கு வழிகாட்டுவார்.'' - என்று ஏழைகளில் இறைவனைக் கண்டிடத் தூண்டியவர்தான் புரட்சித் துறவியான விவேகானந்த அடிகளார்.

''முதலில் நம்மைச் சுற்றி இருப்பவர்களைத் தெய்வமாக நினைத்து வழிபடுங்கள் - என்று தன் பின்னே வந்தாரைப் பார்த்து கட்டளையிட்டார். கவனத்தைத் திருப்பினார். ''எல்லாவற்றிலும் முதற் பங்கு ஏழை எளியவர்களுக்குத் தரப்பட வேண்டும். அவ்விதம் தந்தது போக, எஞ்சியிருப்பதைப் பெறவே நமக்கு உரிமையுண்டு.'' - என்று பொதுவுடை பேசியவர் நமது விவேகானந்தர். இப்படியான இவரின் சொல்லையும், செயலையும் நோக்கியே இவர் புரட்சித் துறவியாகப் போற்றப் படுகின்றார். விவேகானந்த அடிகளின் சிந்தனையும், கண்ணோட்டமும் எப்போதுமே இறைவன் புகழ் பாடுவதிலோ அன்றி இந்து சமயத்தின் பெருமைகளை மட்டும் பறை சாற்றுவதிலோ மட்டும் முனைப்பாக அமையவில்லை. அவரின் சமயப் பணி சமுதாயத்தின் சகல மட்டத்தார்களையும் உற்று நோக்கி, ஆக்கம் தேடுவதாகவே விளங்குவதைப் பார்க்கின்றோம்.

# தரிசனம்

— என். எஸ். எம். இராமையா —

ஈஸிசேரில் சாய்ந்து ஒரு சுருட்டைப் புகைத்தவாறு யோசனையில் ஆழ்ந்திருந்தார் கன்னையா கணக்கப்பிள்ளை. சுருட்டின் நுனியிலே, அரை அங்குல நீளத்திற்கு, வயிற்றுக்குள் கனலை அடக்கிய சாம்பல். வலதுகை, புருவ மயிரை நெருடியும் தடவிக்கொண்டுமிருந்தது.

பங்களாவுக்கு வெளியே லேசாக மனித ஆரவாரம் கேட்டது. கணக்கப்பிள்ளை தலையைத் திருப்பிப் பார்த்தார். பின்னர் ஈஸிசேர் சரசரக்க எழுந்து வெளியே வந்தார். வாசலுக்கு அருகில் ஏழெட்டு மனிதர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். எல்லோரும் அந்தத் தோட்டத்துக் கோவில் நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள்.

''வாங்க'' என்று அவர்களை அழைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தார். அவர்கள் வருவது ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. எனவே தரையில் தயாராக பாய் விரிக்கபபட்டு கிடந்தது. எல்லோரும் அமர்ந்தார்கள். ஈஸிசேரில் அமர்ந்தவாறு என்ன விஷயம்'' என்றார்.

அந்த வருடம் கோவில் விஷயத்தில் ஒரு சிக்கல். ஆடி மாதந்தோறும் கோலாகலமாக நடக்கும் பூஜை முடிந்து கடைசி நாளன்று அக்கினிச் சட்டி ஏந்தி, தோட்டத்தை வலம்வருவாள் காளி அம்மன். ஒவ்வொரு வருடமும் வடிவேலுப் பண்டாரம்தான் அக்கினிச்சட்டி ஏந்துவான். அவனுக்கு காளியின் ''ஆவேசம்'' வரும். நெற்றி மட்டத்துக்கு தீ உயர, சட்டியை கையில் வைத்துக்கொண்டு அவன் சொல்லும் சொற்கள் ஒவ்வொன்றும் கனல் துண்டுகள் தான். சொன்ன சொல் அப்படியே பலிக்கும்.

தோற்றமும் பயங்கரம். மஞ்சள் நீரில் தோய்ந்த வேட்டி கட்டி இடுப்பில் ரத்தச் சிவப்புப் பட்டுத் துணியைச் சுற்றியிருப்பான். கரும் பாறைக்கல் போன்ற உடம்பில் அகன்ற தோள்கள், முகம்பூராவும் குங்குமத்தை அப்பிக்கொள்வான். அகன்ற நெற்றிக்கு மேலிருந்து கழுத்து வரைக்கும் அருவிக் கொட்டுவதுபோல் தலைமயிர். சிவந்து பிதுங்கும் கண்களோடு ஓங்கார சப்தமிட்டு அவன் வரும்போது சின்னப் பெண்கள், குழந்தைகள் எல்லோரும் எங்காவது பதுங்கி விடுவார்கள்.

நான்கு மாதங்களுக்கு முன்பு வடிவேலுப் பண்டாரம் காய்ச்சல் வந்து செத்துப்போனான். இந்த வருடம் அக்கினிச் சட்டி எடுப்பது யார் என்பதுதான் பிரச்சினை. தோட்டத்தில் இன்னும் ஐந்தாறு 'ஆவேசக்'' காரர்கள் இருந்தனர். அவர்களுள் நானா நீயென்று குடுமிப்பிடி!

கோவில் நிர்வாகிகளும் யாருக்கு சந்தர்ப்பம் கொடுப்பது என்று புரியாமல் தயங்கி கொண்டிருந்தார்கள். விஷயம் கோவிலோடுபோகாமல் கோஷ்டிப் பூசலாகி தோட்டம் இரண்டுபடும் அளவுக்கு உருவாகியிருந்தது. அதற்காகத்தான் கணக்கப்பிள்ளையின் உதவியை நாடி வந்தார்கள்.

தலைகுனிந்து, புருவமயிரை நீவியவாறு இருந்த கணக்கப்பிள்ளை, நிமிர்ந்து சுருட்டு சாம்பலைத் தட்டி கலைத்துக் கொண்டார். எதிரே இருந்தவர்களைப் பார்த்து ''ஆமா! இதுக்கு நான் என்ன

---

அடிகளார் விவேகானந்தரின் இந்தப் புதிய போக்கு மேலைச் சிறந்த ஆந்த சமயப் பெரியார்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகவே உள்ளது.

> ''எழுமின்! விழிமின்!'' என பாரத தேசத்து மக்களை அறைகூவி அழைத்த அப்பெரியார், கன்னியாகுமரியில வந்து கரை நீந்தி புதிய வரலாறு படைத்தவர்.

எப்போதும், புராண, இதிகாசங்களிலே மட்டும் தன்னை முழுமையாக முடக்கிக் கொள்ளவில்லை அவர்.

உலகத்தோடு ஒட்ட ஒழுகி, கால ஓட்டத்தைக் கவனித்து, இந்து சமயத்தினரை அதற்கு அமைய நடைபோடத் தூண்டினார்.

> ''எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
> அவ்வது உறைவது அறிவு''

- என்பது தமிழ்மறைவன் திருவள்ளுவரின் வழி, இதுவே நமது விவேகானந்தரின் சமய வழியாகும். அவர் மாக்ஸ் முல்லர் போல தனக்கும் இந்தியா மீது பற்று வர வேண்டும் என்று சொன்னவர்.

''நான் தத்துவ ஞானியல்லேன். ஆத்மஞானியுமல்லேன். நான் ஏழை. ஏழைகளை நேசிக்கின்றேன். அவ்வளவு தான்,'' - எனத் தன்னை வெளியுலகுக்கு அறிமுகஞ் செய்துள்ள அடிகளார், ''மக்கள் தொண்டே மகேசன் தொண்டு'' - எனும் நெறியில் நடந்தார். அதனாலே அவரின் சமயப்பணி சமுதாயப் பணியாக மிளிர்ந்தது.

பண்ண முடியும்? என்றார். வந்தவர்களில் மூத்த ஒருவன், அடக்கமாகக் கைகளைக் கட்டிக்கொண்டு ''அப்பிடி சொல்லப்படாதுங்க ஐயா தான் இதுக்கு நல்ல முடிவு சொல்லணும்'' என்று சொல்லிவிட்டு பக்கத்திலிருந்தவர்களைப் பார்த்து 'என்ன' என்றான்.

சொல்லப்போனால் கணக்குப்பிள்ளைக்கு இம் மாதிரி விஷயங்களில் நம்பிக்கையோ, ஈடுபாடோ கொஞ்சங்கூட இல்லை. வெள்ளைக்காரரின் வேலையை யந்திரம்போல் செய்து, எதிலும் பிடிப்பு இல்லாமல் சலித்துப் போயிருந்தார். பொழுது விடிந்து பொழுது போனால் மனிதன், நாயாக படும் பாட்டில் சட்டியாவது, பானையாவது!

மறுநாள் யோசித்துச் சொல்வதாக சொல்லி அவர்களை அனுப்பிவைத்தார்.

அடுத்தநாள், அந்தத் தோட்டத்தில் 'ஆவேசம்' வரும் அத்தனை பேரையும் கூப்பிட்டு 'இந்தா பாருங்க இந்தா இருபது முப்பது ரூபா காசு, சாராயப் போத்தல், வேட்டி லேஞ்செல்லாம் கொடுக்கு மென்று பொறுப்பெல்லாம் பேசப்படாது. இது கோவில் விவகாரம், ஏதாவது ஒரு சமாதானத்துக்கு வாங்க'' என்று சொல்லப் பார்த்தார். யாரும் மசிவதாக இல்லை. அதன்பிறகு தன்னுடைய தீர்ப்பைச் சொன்னார்.

''நான் ஒரு சாமான் மறைச்சுவைச்சு 'குறி' கேட்பேன். அது என்னங்கிறதை யாரு சொல்லுறாங்களோ, அவங்க அக்கினிச்சட்டி எடுக்கலாம். என்ன சாதாரணமா?'' என்றார். உள்ளூர அவருக்கு இந்த சாமியாட்ட விவகாரம் எல்லாம் உண்மைதானா என்பதைப் பரீட்சிக்க வேண்டும் என்பதும் ஒரு ஆவல். அவர்களும் சம்மதித்தார்கள். அந்த வாரத்து ஞாயிற்றுக்கிழமை மாலையில் பரீட்சை ஆரம்பமாயிற்று.

உண்மையில் அபூர்வக் காட்சிதான். கோவிலுக்கு முன் பரந்த வெளியில் ஆறுபேர், குளித்து மஞ்சள் ஆடை அணிந்து, வரிசையாக நின்றார்கள். கோவில் பூஜை நடந்தது. அம்மன் சிலைமீது போடப்பட்டிருந்த மாலைகளில் ஆறு மாலைகளைக் கொண்டு வந்து 'ஆவேசக்'காரர்கள் கழுத்தில் போட்டு, விபூதி பூசினார் பண்டாரம். கோவிலுக்கு நேர் எதிரே மேஜை ஒன்று போடப்பட்டு அதன் மீது கணக்கப்பிள்ளை கொண்டுவந்த ரகசியப் பொருள் வைக்கப்பட்டது. பேப்பரால் நன்றாக மறைக்கப் பட்டது. சிறு பொட்டலம், பரந்த வெளியைச் சுற்றி வேலி அடைத்தாற்போல, தோட்டத்து ஜனங்கள் பூராவுமே நின்றார்கள்.

பாதி விவகாரம் பார்க்க, பாதி வேடிக்கை பார்க்க ஒரு மூலையில் நான்கு பறையடிப்பவர்கள், ஒதுங்கிநின்று 'டணக் டணக்'கென்று பறையடிக்கத் துவங்கினார்கள். ஆவேசக்காரர்களின் பக்கத்தில் நின்று ஒருவன் பாடத்துவங்கினான்.

'தாயே வாருமம்மா!
 தயவுடனே வாருமம்மா!
காளியே வாருமம்மா!
 கடைக்கண்ணால் பாருமம்மா!

என்று தொடங்கி வேகநதியின் செல்லும் ஆவேசமான பாடல். ஒவ்வொரு வரியின் முடிவிலும், கூட்டம் பூராவும் 'அரோஹரா' எனக் கூவியது. உடலை புல்லரிக்கச் செய்தது. பாடலில் லயித்திருந்த ஆவேசக்காரர்கள் சிலைபோல நின்றனர். பல நிமிடங்களுக்குப் பிறகு ஒருவனுக்கு உடல் லேசாக நடுங்கத் தொடங்கியது. ஆவேசநிலை படிப்படியாக கூடி நடுக்கம் ஆட்டமாகியது. கண்கள் கனலாகி மூச்சு அதிக வேகத்தில் 'புஸ் புஸ்'' என்று பாம்பின் சீறலாகியது. 'சாமி வந்துருச்சி!' கிசுகிசுத்தது கூட்டம். ஆவேசம் வந்தவன் ஓடத்தயாராவது போல் ஒரு காலை முன் வைத்து கைகள் இரண்டையும் சேர்த்து முடுக்கிய வாறு பேய்த்திமிறலுடன் கூட்டத்தைத் திரும்பிப் பார்த்தான். எதிலும் லயிக்காத பார்வைதான். எனினும் சிறுபிள்ளைகள் மருண்டன, சில அழவே துவங்கி விட்டன.

ஆவேசம் வந்தவன், கைகளைக் கோர்த்த படியே தலைக்குமேல் தூக்கி 'ஆ' வென்று அலறினான். மனித அலறலுக்கு அவ்வளவு வலிமை இருக்க முடியாது.

சந்தர்ப்பம் தெரிந்து அவனுடைய கையால் ஒருவன் நீண்ட பிரம்பு ஒன்றை அவன் கையில் திணித்தான். அந்தப் பிரம்பால் தன் முதுகிலேயே பளீர் பளீர் என்று விளாசிக் கொண்டான்.

மற்ற ஐவருக்கும் சற்று நேரத்தில் 'ஆவேசம்' வந்து அறுவரும் ஏககாலத்தில் அந்த இடத்தை ருத்ர பூமியாக்கிக் கொண்டிருந்தார்கள். ஒருவனுக்கு ஆணியின் முன் பகுதி நிரம்பிய பாதக்குறடு அணிவிக்கப்பட்டது. அதை அணிந்து, பறையின் தாள லயத்திற்கேற்ப ஆடிவந்தான். இன்னுமொருவனுக்கு நாக்கை வெளியே இழுத்து, நீண்ட வேல் ஒன்றை நடுநாக்கில் வைத்து அழுத்தினார்கள். வேல் நாக்கைத் துளைத்து தாடையிலிருந்து மூக்குவரை நீண்டு நின்றது.

சுமார் அரைமணி நேரத்துக்குப் பிறகு, 'ஆவேசம்' ஓரளவு வேகம் குறைந்த நிலையிலிருக்கும்போது, நாலைந்து பேர் சேர்ந்து ஒருவனைப் பிடித்து இழுத்து வந்தார்கள். அவன் அப்போதுகூட அவர்களையும் சேர்த்துக்கொண்டு ஆடியது, பார்க்க வேடிக்கையாக இருந்தது.

கூட்டத்தில் ஒருவன் ''சாமி நம்மளை சோதிச்சது போக நாமளும் சாமியை சோதிக்கிறோம்'' என்றான். சிலர் சிரித்தனர். மேஜைக்கருகில் கொண்டு வந்ததும் ஒருவன் ரகசியப் பொருளைக் காட்டி 'தாயே! சொல்லும்மா இதுக்குள்ளே என்னா இருக்கு சொல்லு பாப்பம்'' என்றான். ஆவேசக்காரன் ஒருமுறை பொட்டலத்தைப் பார்த்தான். மூச்சு வேகமாக சஞ்சாரம் செய்தது. வாயிலிருந்து இனம் புரியாத சப்தங்கள் கிளம்பின. தன்னைப் பிடித்து நின்ற அத்தனை பேரையும் இழுப்பதுபோல், கால்களை உந்தி ஒரு பாய்ச்சல், மறுகணம் கால்கள் தொய்ந்து மண்ணில் உடம்பு சாயத்துவங்கியது. சுற்றி நின்றவர்கள் அவனைத் தூக்கி மூலைக்குக் கொண்டுவந்தார்கள். ''என்ன ஆச்சு?'' என்று கூட்டத்தில் சிலர் கேட்டனர். 'சாமி மலை ஏறிட்டுது, என்றான் ஒருவன்.

இன்னுமொருவனை பிடித்துக்கொண்டு வந்தார்கள். அவனும் நான்கு குதி குதித்துவிட்டு, கழுத்தில் கிடந்த மாலையிலிருந்து ஒரு பூவைப் பிடுங்கி காட்டிவிட்டு மண்ணில் சாய்ந்தான். கணக்கப்பிள்ளை உதட்டைப் பிதுக்கினார். என்ன அதிசயமோ, ஐவரில் ஒருவனுக்குக் கூட அது என்னவென்றே சொல்ல முடியவில்லை. இது ஒரு போலி நாடகமா, அல்லது ஆவேசக்காரர்களின் அருள் வன்மையற்றதா எனத் தயங்கிக் கொண்டு இருந்தார் கணக்கப்பிள்ளை. அவருக்கு மனதில் அவநம்பிக்கைதான் மேலோங்கிற்று.

அப்போது தான் அந்த அதிசயம் நடந்தது. கூட்டத்தில் பெண்கள் பகுதியில் திடீரென ஒரு சலசலப்பு. சிறு குழந்தைகளும் சில பெண்களும் கூட்டத்தை விட்டு விலகி ஓடினர், கூட்டத்துக்குள்ளிருந்து அம்பெனப் பாய்ந்து வந்தாள் கிழவி ஒருத்தி சாதாரண நாட்களில் நடக்கவே ஜீவனில்லாத அவள், இப்போது ஒரு குமரிப் பெண்ணின் மிடுக்கோடு விரைந்து நின்று ஆடினாள். ஆயினும் தளர்ந்த உடல், எனவே சிலர் ஓடிச் சென்று தாங்கிக் கொண்டனர். அவர்களையும் இழுத்துக்கொண்டு, வெட்டவெளியின் நடுப்பகுதிக்கு வந்தாள். கோவிலின் உட்புறம் இருந்த எண்ணெய் குவியலில் கருப்பாகிப் போயிருந்த அம்மன் சிலையைப் பார்த்தாள். ஆவேசம் கூடியது. புயலில் சிக்கிய சவுக்கு மரம் போல உடல் ஆடியது, அவளைத் தாங்கி நின்றவர்கள் அவளை மெல்ல மேஜைக்கருகில் கொண்டு வந்தார்கள். கிழவியின் கண்கள் பொட்டலத்தை வெறிக்கப் பார்த்தது. மறுகணம் 'பட் பட்'டென்று வயிற்றில் அடித்துக்கொண்டாள். பக்கத்தில் நின்றவர்கள் என்னது?'' என்றார்கள். கிழவி மீண்டும் வயிற்றில் அடித்துகொண்டு பொட்டலத்தை சுட்டிக் காட்டினாள். ''இப்பிடிச் சொன்னா பத்தாது. வாயைத் தொறந்து வெவரமா சொல்லு'' என்றார்கள்.

'டேய்' என்று சத்தமிட்டாள் கிழவி. 'அது ..அது..., என்றாள் தொடர்ந்து, சொல்லை முந்திக்கொண்டு மூச்சு வேகமாக முந்தியது. கைகள் மீண்டும் வயிற்றில் அடித்துக்கொண்டன; 'அன்னம்டா' அது அன்னம் ...அன்னம்'' என்று கத்தினாள்.

கணக்கப்பிள்ளை புன்முறுவல் பூத்தார். உள்ளூர வியப்பும்கூட. கிழவி மேஜைமேலிருந்த விபூதிச் சம்புடத்திலிருந்து விபூதியை அள்ளும்போது, பயபக்தியோடு கை நீட்டி வாங்கிக்கொண்டார். பக்கத்திலிருந்தவர்களிடம் கெழவி சரியா சொல்லிச்சு' என்று சொல்லிவிட்டு பொட்டலத்தை பிரித்தார்.

உள்ளே ஒருவகை நெல்மணி இருந்தது; யாரோ ஒருவன் ''சொல்லுங்க...அரோஹரா!'' என்று கூவினான். கூட்டம் பூராவும் 'அரோஹரா' என்று எதிரொலித்தது.

அந்த வருடம், காளிதரிசனம் தடைப்படவில்லை.

## "பூரிப்பு"

பேருந்தில் இருவர் இருக்கை. ஒருவர் ஒன்றரைக்கு மேல் எடுத்துக்கொண்டு காலையும் தூக்கிப்போட்டுக்கொண்டு இருந்தார். அந்த இடந்தான் அமர இருந்தது. நெருங்கி ஓரமாக அமர்ந்தேன். ''இன்னொருவர் அமர வேண்டும் என்றும், அமர வந்துள்ளார் என்றும் சிறிதும் அசைவின்றி அமர்ந்திருந்தார் அவர். யான் ஒன்றும் சொல்லாமல் பாதி உள்ளும், பாதி வெளியுமாய் அமர்ந்தேன. பையில் இருந்த திருக்குறளை எடுத்துப் படித்தேன். நூலை எடுத்ததும், படித்ததும், அவர் கண்ணில் படவே இருப்பில் தூக்கிப்போட்டிருந்த அவர் கால்கள் இறங்கின. ஒன்றரை - ஒன்றேகாலாய் ஒன்றாய்க் குறுகியது, இடம். அவர் வாய் அவரை அறியாமலே ''நன்றாக இருந்து கொள்ளுங்கள்'' என்றது. ''நீங்கள் வாய்ப்பாக இருந்து கொள்ளுங்கள்'' என்றேன். இல்லை. இல்லை நீங்கள் நன்றாக உட்கார்ந்துகொள்ளுங்கள்'' என்று என்போலவே ஒல்லியான அவர் முக்காலும் ஆனார். ஒரு சொல் சொல்லாமலே கால் இறங்குவானேன்? இடம் விரிவானேன். ஒன்றேமுக்காலடித்திருக்குறள் என்னவேலை எல்லாம் செய்து விடுகிறது?

தொகுப்பு—க. கனகராசா.
ஆதாரம்—குறளியம்.

# தோட்டங்களில் சமயநெறி பேணல்

— பதுளை ஆர். ஆறுமுகம் —

'திரைகடலோடியும் திரவியம் தேடு' எனும் முதுமொழியினுக்குச் சொந்தக்காரர்கள் தமிழர்கள். அதனால் சாப்பிட்டு உயிரை வளர்த்துக்கொள்ளவும்; சம்பாதித்து குடும்பத்தைக் காப்பாற்றவும். ''சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் கால்மட்டம்'' எனும் இறுதி முடிவோடு, கப்பலேறியவர்கள் நம் முன்னவர்கள். இந்த நாடோடித் தமிழர்கள் சென்று; செறிந்து; வாழ்ந்த உலக நாடுகளில் எல்லாம் தாங்கள் முருகன் - விநாயகர் - அம்மன் கோயில்கள் கட்டி, வழிபட்டார்கள். சமய நெறியில் வாழ்ந்தார்கள்.

## பண்பாட்டு நெறி

பழந்தமிழரின் வாழ்வியல் நெறியை ஒட்டி, எங்கெங்கு சென்று வாழ்ந்தாலும்; அவர்கள் தங்கள் வழிபாட்டியலையும் ஏனைய போற்றத்தக்க மரபு வழிகளையும் பேணினார்கள். பயபக்தியோடு பின்பற்றி நின்றார்கள்.

தோட்டங்கள் சூழ்ந்த நகரங்களிலே வாழ்ந்த வணிகப் பெருமக்களான தமிழர்கள் - தமிழகத் தொடர்புகளை வளர்த்தவாறே சமய விழாக்களை நடாத்தினார்கள்.

இவர்களை முன்மாதிரியாகக் கொண்டே மலையகத் தமிழர்களும், ஆலய வழிப்பாட்டினையும், அப்போதைக்கப்போது திருவிழாக்களினையும் நடாத்தினார்கள்.

மலைசார்ந்த இடங்களிலே அமைந்த தோட்டங்களிலே வாழும் இந்து சமயத்தினர் முருகனுக்குக் கோயிலமைத்து, வழிபாடு செய்தார்கள். மயில், தேர் இரதம் மூலம் கடவுளை ஊர்வலமாகக்கொண்டு சென்றனர். பெரும்பாலும் கும்பகோணத்திலிருந்து தான் கடவுள் சிலைகளை இங்கு கொண்டு வந்தனர்.

மத்திய மலைப்பாங்கான இடங்களில் உள்ள தோட்டங்களிலே வாழ்ந்த தமிழர்கள் மாரியம்மனுக்கு கோயில் கட்டி, மாசி மாதங்களிலும், ஏனைய திருநாட்களிலும் சிறப்பான வழிபாடும், அலங்காரத் தேர்ப் பவனியும் எடுத்தார்கள். இன்றும் இப்படியான விழாக்கள், வெகு விமரிசையாக நடக்காவிட்டாலும், மரபு காக்கும் பாங்கில் நடப்பது வழக்கம்.

## தோட்டங்களும் சமய நெறிமுறைகளும்

கல்லிலே கலைவண்ணம் கண்ட தமிழர்கள், தமிழ்ச் சொல்லிலே பக்தி நெறியை ஈந்தவர்கள். கோயில்லா இடங்களிலே குடியிருக்க விரும்பாதவர்கள். கோபுர தரிசனம் கோடி புண்ணியம் எனும் சமயக் கோட்பாட்டை மனதாரப் பின்பற்றி வாழ்ந்தவர்கள். அப்படியானவர்களின் வழித்தோன்றல்களான நமது மலையகத் தமிழர்களின் சமயப் பற்றினையும், சமய அறிவினையும் பற்றி நினைத்தால் மனம் மிகவும் வேதனை அடைகின்றது.

தோட்டங்களிலே உள்ள இந்து சமயத்தைச் சார்ந்த நடுத்தர வகுப்பினரான சேவையாளர்கள்; அடிமட்டத்தினர் என்று தாழ்வாக மதிக்கப்பட்டுள்ள உழைப்பாளர்களாகிய ''லயம்'' வாழ் பரம்பரையினர் ஆகிய இம்மக்களிடையே; தங்களது 'இந்து சமயம்' பற்றிய தெளிவான வழிபாட்டு அறிவும்; பின்பற்ற வேண்டிய சமய நெறி முறையும்; இன்னும் ''குருட்டுத்தன''மானதாவே உள்ளது ''இந்துசமயம்'' பற்றிய முழுமையான அடிப்படை வழிபாட்டு நடைமுறைகளும் அவர்கட்குத் தெரியாது.

''ஏதோ கோயிலுக்கு எல்லோரும் போகின்றார்கள். நாங்களும் செல்லவேண்டும்,'' — என்று சம்பிரதாயப் பூர்வமான சடங்காகவே; அவர்கள் இறை வழிப்பாட்டை எண்ணி நடப்பதாகவே நாம் முடிவு செய்ய வேண்டிய கட்டம். உண்மையும் இதுதான்.

மாதாமாதம் தங்களது சம்பளத்தில் 10/- ரூபாயோ அல்லது 20/- ரூபாயோ கோயிலுக்கு ''வரி''யாகப் பிடிக்கின்றார்கள். ''திருவிழா அன்று கோயிலுக்குச் சென்றால் போதும். சுவாமி ஊர்வலம் வரும்போது, அதில் கலந்துகொண்டு ஆடிப்பாடினால் நமக்கு இறைவன் புண்ணியம் தருவார்.'' என்ற மேலோட்டமான நினைப்பில்தான் இன்று தோட்ட மக்களது ''சாமி கும்பிடும் முறையும் சமயத் தெளிவும்'' உள்ளது என்பதைக் குறிப்பிடும்போது, இந்து சமயத்தினராகிய நாம், கவலையும்-வெட்கமும் கொள்ள வேண்டியவர்களாகவே உள்ளோம்.

பல ஆயிரங்களாகப் பணத்தைத் திரட்டி அத்தொகையினை இரண்டொரு தினங்களிலேயே ''திருவிழா'' ''கொண்டாட்டம்'' எனும் பேரில் வீண

டித்து, விரயமாக்குவதைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றோம்.

அர்ச்சனை, வழிபாடுகளைக்கூட, ஆறுதலாக அதை விழாக் காலங்களிலே தோட்டக் கோயில்களில் செய்வதில்லை. முன்பு எல்லாம் ''பண்டாரம்'' எனும் வகுப்பார்கள். ஓவ்வொரு தோட்டக் கோயில்களிலும் கட்டாயமாக இருந்தனர். இன்றோ நிலைமை அப்படியே அதற்கு மாறாக உள்ளது.

செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் - ஏனைய வழிப்பாட்டு நாட்களில் தோட்ட மக்கள் அனைவரும் கோயிலுக்கு வந்து, ஒரு மணித்தியாலமாவது ஆலயத்தில் குழுமி ஆண்டவனை அமைதியான முறையில் தொழ வேண்டும் எனும் ஒரு நியதி இல்லை. இதனால் கட்டுப்பாடற்ற சமயத்தினராக நமது இந்து சமயத்தினர் தோட்டங்களில் உள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதனை விரைவில் மாற்றிக்கொள்ளும்படி, நமது தோட்ட மக்களை நல்ல வழிகாட்டி வற்புறுத்தவும் வேண்டும். இல்லையெனில் ''இந்துசமயம் என்றால் என்ன?'' என்று கேட்கும் சூழ்நிலை ஏற்படலாம்.

## கோயில்களைப் பாதுகாத்தல்

பல லட்சங்களைச் செலவிட்டு, ஆலயங்களை அமைத்து, ''குடமுழுக்கு'' விழா எடுத்து, ஆடம்பரமாகப் பூசை நடாத்திவிட்டு ஆறு மாதங்களில் அக்கோயிலைப் பார்த்தால், தூய்மை அற்ற சூழ்நிலையில் ''சும்மா மூடிக் கிடப்பதே வழக்கம்'' என்ற நிலை.

கோயிலைச் சூழ்ந்த இடங்களும், பிறவும் தூய்மை கெட்டுக் கிடக்கும். அதனால் கோயிலின் புனிதத் தன்மையும், பார்த்தால் மனதில் பதியும் பக்தியுணர்வும் பாதிப்படைவதை எவரும் மறுக்க மாட்டார்கள்.

பொதுவாக தோட்டங்களிலுள்ள பெரும்பாலான கோயில்களின் நிலையே இப்படித்தான். இப்போக்கினை இனியும் வளர இடமளிக்கக் கூடாது. இந்து சமயத்தினரின்பால், சமயம் பற்றிய தெளிவான அறிவும் விளக்கமும் ஏற்பட வகை செய்தல் அவசியம் இப்படி நமது சமயம் பற்றிய அறிவை நமது சமய மக்களிடையே பரப்பினால், அவர்களிடைய சமய அடிப்படையிலே கட்டுக்கோப்பான ''கூட்டுவழிப்பாட்டு'' முறையை அறிமுகப்படுத்தினால் நிச்சயம், ஆலயங்களும் பாதுகாக்கப்படும். ஆண்டவனை வழிபடும் நெறியும் தெளிவாகப் பின்பற்றப்படும்.

## தோட்டக் கோயில்களில் திருட்டு

தோட்டங்களில் மிகவும் சாதாரணமாகப் பேசிக் கொள்கின்றார்கள். ''கோயிலை உடைத்து, சாமி சிலையைத் திருடிக்கொண்டு போய்விட்டார்கள்: உண்டியலை உடைத்து காணிக்கையைக் களவாடிக் கொண்டு ஓடிவிட்டார்கள்.'' என்று!

''கோயில் கமிட்டியினர் கோயில் நிதியைத் திருடினார்கள். மற்றவர்கள் கோயிலையே உடைத்துக் கொண்டு திருடுகின்றார்களாம்.'' இப்படி ஏட்டிக்குப் போட்டியாக இந்து சமயத்தினர் முட்டி மோதிக் கொண்டு, தோட்டங்களிலே உள்ள ஆலயங்களைப் பாழ்படுத்துவதைப் பார்க்கின்றோம்.

## தொழிற்சங்கங்களின் தலையீடு

''பத்து பேர்களுக்கு ஒரு தொழிற்சங்கம்'' என்று கூறுபோட்டு; தொழிலாளர்களை வேறுபடுத்தி, தன் நலத்தை வளர்க்கும் சுரண்டல் பேர்வழிகளினால் தோட்டங்களில் நமது சமயத்தின் தூய்மையும், வழிபாட்டு முறைகளும் சிதைக்கப்பட்டுள்ளன. சங்கப் பிளவுகளினால், பல தோட்ட கோயில்களே பல ஆண்டுகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. ''எந்தச் சங்கத் தலைவர் கோயில் கமிட்டித் தலைவராக வருவது?'' — என்பதிலே போட்டி. இதனால் நமது இந்து சமயத்தின் வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது.

## அறங்காவலர்கள் குழு

எனவே இப்படியான இரண்டுங்கெட்ட நிலையினை மாற்றி, ஏனைய இடங்களில் (நகர்ப்புறங்களில்) அமைக்கப்பட்டுள்ள ''அறங்காவலர்கள் குழு'' போன்ற அமைப்பைத் தோட்டங்களில் ஏற்படுத்த வேண்டும் எல்லாத் தொழிற்சங்க வாதிகளும் இக்குழுவில் இடம் பெறல் வேண்டும். கோயில் நிதியை சரியான வழியில் கையாள விதிகளை உண்டாக்கினால் தான் தோட்டங்களில் இந்து சமயமும், நெறியும் இனிமேல் நிலையாக வளரும்.

தவத்திரு. குன்றக்குடி அடிகளார் ''கோயிலுக்கும் குடிசைக்கும் தொடர்பு இருக்க வேண்டும். நமது சமயத் தொண்டர்களின் பணி - சமுதாயத்தின் அடிமட்டத்திலராகிய பாமர மக்களின் குடிசைகளைத் தட்டித் திறக்க வேண்டும். அப்போதுதான் நமது சமயம் அதன் பயனை மக்களிடத்திலே பரப்பியதாக இருக்கும்.'' — என்றார்.

இந்த புதிய போக்கும், ''சகலரும் சமம்'' எனும் கண்ணோட்டமும், நமது சமயத் தொண்டர்களிடையே ஏற்பட்டால் தான், தோட்டங்களில் இந்து சமயம் நீடித்து நிலைகொள்ளும். இல்லையேல், தோட்ட மக்களின் தேவைகளை நிறைவேற்றித் தரு

# வாழ்வின் நிலையாமை உணர்த்தும் காசிமாநகர்

—பத்மா சோமகாந்தன்—

காசி மண்ணில் காலடி பதித்ததும், இந்து மதத்தின் தத்துவ ஒளியாக பெருமையும் மேன்மையும் தலைமைப் பீடமாயுமான இடத்தில் நிற்கிறோம் என்ற எண்ணம்,

ஞானிகளும், யோகிகளும் முனிவர்களும் தவம் செய்து அருள் பெற்ற பூமிக்கு வந்துவிட்டோம் என்ற பெருமிதம்.

இந்துமதத்தைப் பரப்பும் கேந்திர நிலையமாக ஆதிசங்கரரால் தெரிவுசெய்யப்பட்ட பூமியைத் தொட்டுவிட்டோம் என்ற எண்ணம்.

துளசிதாசரும் கபீர்தாசரும் குருநானக்கும் பக்தியையும் சமாதானத்தையும் ஒற்றுமையையும் சேர்த்த இடத்தை ஒன்றிவிட்டோம் என்ற நினைப்பு.

எல்லாவற்றுக்கும் மேலாக இறைவன் தானாகவே விரும்பி உறையும் விஸ்வநாதசுவாமி ஆலயத்திற்கு அருகாமையில் நிற்கிஸ்றோம் என்ற மகிழ்ச்சி.

ஆயிரத்து ஐந்நூறு ஆலயங்களையும் அறுபத்திநூறு தீர்த்தக் கட்டங்களையும் கொண்டதிவ்ய க்ஷேத்திரத்தைத் தரிசிக்க இறைவன் அருள் பாலித்துவிட்



ஹனுமான் கட்டில் நீராடியபின் திருமதி ஈஸ்வரன், திரு. ஈஸ்வரன், திரு. சோமகாந்தன், திருமதி பத்மா சோமகாந்தன்.

புகைப்படம்: ராஜன்

டான் என்ற பெருமிதம், கருணை எம் உள்ளத்தில் மேன்மேலும் ஆர்வத்தையும் பக்தியையும் சுரக்கச் செய்கின்றது.

பாவத்தைப் போக்கும் புண்ணிய பூமியில் புனித கங்கைக் கரையில் அமைந்து ஆத்மீக தத்துவத்திற்கு உயிர்ப்பூட்டும் இறைவன் அருள் பொலிந்து விளங்கும் தரையிலே காலடிகளைப் பதித்து நடக்கும்போது நம்மையறியாமலே நரம்புகள் புல்லரிக்கின்றன; புத்தூக்கம் கொள்கின்றன

எங்கு நோக்கினும் எருதுகளும் பசுக்களும் மக்கள் கூட்டத்தோடு ஒன்றித் திரிகின்றன. அவற்றின் பருமனும் செழிப்பும் அழகும் மனதைப் பெரிதும் கவரும் தன்மையன. தமது தலைவன் விருப்புடன் உவந்துறையும் ஊரில் தாமும் அவரது தொண்டர்

---

வதாக வாக்குறுதி அளித்து, அவர்களின் பலவீனத்தைப் பயன்படுத்தி, நன்கு திட்டமிட்டு, அவர்களுடன் இரண்டறக் கலந்து ஒட்டி உறவாடி, தங்களின் மதத்தை மிக இலகுவாகப் பரப்பி வரும் குழுவினர், முழுமையாகவே - சமயத்துறையில் ஆதிக்கம் செலுத்திட நாம் வழி சமைத்துக் கொடுத்தவர்களாவோம்.

''மேன்மைகொள் சைவநீதி விளங்கவும், எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி எனும் பொது நோக்கு விரவவும் நமது சமயப்பணி - சகலரையும் அடையட்டும்.

மாகாண சபைகளின் உறுப்பினர்களும் அமைச்சர்களும் இதற்கான பணியில் முழு மூச்சுடன் ஈடுபடல் அவசியம். அநுபவசாலிகளையும் திறமைசாலிகளையும் இத்துறையில் ஈடுபடுத்தி, நமது தோட்ட மக்களிடம் இந்து சமயம் என்றால் என்ன? அதன் வழிபாட்டு இயல்புகள் எவை? மாதத்தில் இருமுறை அவசியம் ஆலய வழிபாட்டில் பங்குபெறல் அவசியம் எனும் கோட்பாடுகளை விளக்குவது இன்றைய முக்கியத் தேவையாகும்.

''சமய நெறிகளைப் பின்பற்றுவது என்றாலே தோட்ட மக்களுக்கு இயலாத ஒன்று'' எனும் பய உணர்வு அவர்களிடம் இடம் பெற்றுள்ளது. அதை அகற்ற வேண்டும். எல்லோரும் எப்போதும் இலகுவில் பின்பற்றக்கூடிய நல்ல நெறிமுறைகளை வழிபாட்டு மரபாகவே கொண்டதே நமது சமயம். இந்த எளிமையான - இனிமையான இறை உணர்வை தோட்டமக்களுக்குச் சொந்தமாக்க நமது இந்து சமய, கலாசார அமைச்சர் முற்பட வேண்டும். இதற்கு சமயப் பெரியார்களும், பரப்புரையாளர்களும், பணியாளர்களும், புரவலர்களும் கைகொடுக்க வேண்டும்.

களாக - வாகனங்களாக - வாழுகின்றோம் எனப் பெருமையுடன் செப்புவது போன்று திருப்பும் இடமெல்லாம் இடபங்களும் பசுக்களுமே. தெருவாயிருந்தாலென்ன, ஒருங்கிய வீதிகளாகவோ முடுக்கு ஒழுங்கைகளாகவே இருந்தாலென்ன அங்கெல்லாம் அவை சோடி சோடியாக, கூட்டங்கூட்டமாக நீண்ட கொம்புகளுடனும், செழித்து வளைந்த ஏரிகளுடனும் உரிமையோடு உலாவுவதைக் காணலாம் அநேகமானவை. வீதியில் குறுக்கே படுத்தபடி அசைமீட்டு ஆறுதல் எடுக்கும். இவை யாருக்குமே தீங்கு விளைப்பதில்லை குழந்தைகள் முதியோர் யாவருமே துணிச்சலாக வீதியில் திரிவர். போக்குவரத்து வாகனங்கள் தாமாகவே இவற்றை விலத்திச் செல்வதேயன்றி இவை விலத்தி இடங்கொடுக்க மாட்டா.

பல்லாண்டு பழமையான இந்நகரில் வீதிகளெல்லாம் அன்றைய நிலையிலேயே குன்றும் குழியுமாகக் காட்சி தருகின்றன.

ஆலய அமைப்பு ஆகம விதிப்படி மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று அம்சங்களும் அடங்கியிருப்பது மிக விசேடமாகக் கொள்ளப்படும் இம்மூன்று விடயங்களிலும் தலைசிறந்து விளங்குவது விஸ்வநாதர் அருளாட்சி செலுத்தும் காசி எனும் புனித ஸ்தலம்.

மூர்த்திகளில் சிறந்த மூர்த்தி—விஸ்வநாதர்
தலங்களில் சிறந்ததலம்—காசி
தீர்த்தங்களில் சிறந்த தீர்த்தம்—கங்கை

கங்கைக் கரையிலே காசியஸ் என்ற ஆரியர்கள் வந்து தங்கியதன் காரணமாக இவ்விடத்தின் பெயர் காசி என வழங்கப்பட்டதென்றும் காசா எனும் அரசன் இவ்விடத்தை ஆண்டதனால் காசி எனப் பெயர் பெற்றது என்றும் சொல்வர்.

பண்டைக்காலந் தொட்டே இந்து மதத்தின் பெருமை பேசும் தலைநகரமாக, முதன்மை நிலையமாகக் காசி இருந்து வருகிறது.

காசியின் புனித நீரான கங்கையில், இந்நகரின் வட எல்லையான ''வாரனு'' எனும் ஆறும் தென் எல்லையான 'அசி' எனும் ஆறும் வந்து கலப்பதனால் 'வாரணாசி' எனப்பெயர் ஏற்பட்டது

பொய்யாயினவெல்லாம் போயகல அஞ்ஞானந் தன்னை அகல்வித்து மெய்ஞ்ஞானமாய் நிற்கும் எந்தைபெருமானை அடைவதற்கு மானிடப்பிறவி எடுப்பதன் நோக்கமே இறைவழி பாட்டால் முத்தி நிலை அடைதல் எனும் இறுதி இலட்சியத்தை, ஆத்மா இறைவனோடு இணையும் முத்திப் பேற்ற அருளும் நிலையம் இவ்வாலயத்தின் சொலற்கரிய பெருமையாகும். காசியில் மரணிப்போர் முத்தியடைவர். மறுபிறவியே இல்லை என்பது இந்துக்களுடைய இறுக்கமான நம்பிக்கை.

'விஸ்வநாதன்' -- என்றால் எல்லா இடங்களிலும் சர்வ வியாபகமாக நிறைந்து விளங்குபவன் என்பது பொருள்.

காசியில் சுயம்புவாக எழுந்தருளியுள்ள விஸ்வநாதர் ஏனைய பன்னிரு ஜோதிர் லிங்கங்களிலும் உள்ளாராகையால் இங்குள்ள லிங்கம் விசேடம் பெற்றது.

காசியின் பெருமையை உலகுக்கு விளக்க பிரமன் விரும்பினார். ஒரு தராசை எடுத்து காசி நகரை ஒரு தட்டிலும் தேவர்கள் வாழும் விண்ணுலகை ஒரு தட்டிலுமாக வைத்து நிறுத்துப் பார்க்கவும் காசியிருந்த தட்டுக் கனத்துக் கீழிறங்க, தேவர்கள் வாழுமிடத்தைக் கொண்ட தட்டு உயர்ந்து மேலெழும்பியது. காசியின் பெருமைக்கு இணையில்லை: காசி மகிமைமிக்கது என்பதை எல்லோரும் ஏற்று வியந்தனர்.

கற்றவனும் கல்லாத பாமரனும் கூட இங்கு வந்தே கடைசி மூச்சைவிட விரும்புகின்றனர். உடலை விட்டு உயிர் நீங்கும் போது அன்னை பராசக்தியானவள் அம்மானுடனைத்தன் மடியில் கிடத்தி சோர்வு நீங்க தன் சேலையால் விசுக்கி ஆசுவாசப் படுத்துவாளாம். அன்னை இப்படி ஆயாசம் தீர்க்கவும் அப்பனான சிவபெருமான் உயிர் நீங்கும் மனிதனுடைய காதில் தாரக மந்திரத்தை ஓதி அவனைச் சொர்க்கத்திற்கு அனுப்புவாராம். இத்தகையவர்களுக்கு மட்டும் மீண்டும் பிறவியே இல்லை. என்னே காசியின் சிறப்பு!

உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் உயிர் பிரியும் போது காசியை மனதால் நினைப்பர்களுக்குமே மோட்சம் உண்டு. இத்தகைய நபிக்மகைள் காசியின் ஆத்மீக உணர்வுக்கு அழுத்தம் கொடுக்கின்றன.

இரண்டாயிரத்தைந்நூறு வருடப் பழமை வாய்ந்த காசி நகரமும் விஸ்வநாதர் ஆலயமும் பல்வேறு மன்னர்கள் ஆட்சியைக் கைப்பற்றிய போதும் பலமுறை தாக்கப்பட்டும், இடிக்கப்பட்டும் அழிக்கப்பட்டாலும் கூட விஸ்வநாதர் ஆலயம் மீண்நும் மீண்டும் கட்டப்பட்டு வழிபாட்டின் முக்கிய இடமாக போற்றப்பட்டது. 13 ம் நூற்றாண்டின் பின்னரும் இருதடவைகள் இவ்வாலயம் இடிபாட்டுக்குள்ளானது. 18 ம் நூற்றாண்டில் ஔரங்கசிப் எனும் அரசன் இங்கிருந்த சிவலிங்கத்தக் கங்கையில் வீசிவிட்டான். இறைவன் இவ்வாலய அர்ச்சகரின் கனவில் தோன்றி கங்கையின் தான் இருக்கும் இடத்தைத் தெரிவித்ததோடு குவாலியர் ராணி அகல்பாய் மூலம் தனக்கொரு ஆலயம் அமைக்குமாறும்ï பணித்தான். இறைவனுடைய ஆக்ஞைப்படி ராணி அகல்யாபாய் கட்டிய கோவிலே இன்றும் காட்சி தருகிறது.

'மூர்த்தி சிறியதாயினும் கீர்த்தி பெரியதென்பதாக' ஆலயக் கட்டிடம் சிறியதாயமைந்திருப்பினும் இங்குள்ள லிங்கம் சுயம்புலிங்கமாதலின் அதன் பெருமை பேசுதற்கரியது. 2 அடித்தொட்டியில் மரகதலிங்கமொன்று சிவலிங்கமூர்த்தியாக அருள் மழை பொழிகின்றது. லிங்கத்தின் மேனியில் அருச்சுனனின் அம்புபட்ட தழும்பும் உள்ளது. இக்கருவறை நாற்புறமும் திறந்தபடி உள்ளே வந்து வெளியே செல்லக் கூடியதாக வாயில்கள் உண்டு.

ஏனைய ஆலயங்களிலுள்ள முறைகள் போலன்றி பக்தர்கள் தாமாகவே கங்கை நீரால் அபிஷேகம் செய்து, மலர் சூட்டி மூர்த்தியைத் தொட்டு வணங்கும் முறை இங்கு கைக்கொள்ளப்படுகின்றது. இறைவன் சந்நிதியில் எல்லோரும் சமமென்ற கோட்பாடு இங்கு பயிலப்படுகின்றது.

செப்பாலான கிண்ணமோ, செம்போ — அருகாமையிலுள்ள கடைகளில் பெற்றுக் கொள்ளலாம்— எடுத்து கங்கை நதியிலே விசாலாட்சி கட்டம் என்ற இடத்தில் கங்கை நீரை அள்ளிவந்து ஆண்பெண் என்ற பேதமின்றி விசுவநாதப் பெருமானுக்கு அபிடேகம் செய்தோம். மலர்களையும் சூட்டினோம். கைகளால் இறைவனை தொட்டு வழிபட்டோம். கங்காதீர்த்தம், பால், இளநீர் போன்றவற்றால் பக்தர்கள் தாமாகவே லிங்கப்பெருமானுக்கு அபிடேகம் செய்யலாம் என்பதனால் நிறையப் பக்தர்கள் அபிடேகம் செய்யவும் மலர் சூட்டவும் தொட்டு வணங்கவும் ஆர்வத்தோடு இருப்பதனால், ஆறுதலாக நின்று வழிபடமுடியாதளவு ஒரே குப்பலாகவும் நெருக்கடியாகவும் இருக்கும். வழிபாட்டிற்கு ஒழுங்கு முறையின்றி எல்லாப் பக்கங்களாலும் வருவோரும் போவோருமாக இடிபாடாகவே இருக்கும்.

தாமே அபிடேகம் செய்து பூஜிப்பதென்பது ஒரு பெரும் பேறுதான். முக்திப் பேற்றை அளிக்கும் மூர்த்தியைத் தீண்டுமின்பத்தை எழுத்தில் இயம்ப முடியாது. கங்கையில் மூழ்கிப் பாவங்களைப் போக்கி, லிங்கமூர்த்திக்கு அபிடேகம் செய்து பூச்சாத்தி வணங்கும் போது பெறற்கரும் பேறு பெற்ற இன்பத்தில் மூழ்கினோம்.

அருளாட்சிப் பொலிவோடு நலிந்தோர்க்கும் நன்றார்க்கும் நண்ணும் காசி விசுவநாதர் ஆலயத்தின் பூஜைப் பொறுப்புகளைக் கடந்த 150 ஆண்டுகளாக நகரத்தார் சமூகத்தினரே நடாத்தி வருகின்றனர். இங்கு பூஜை செய்யும் அர்ச்சகர்களைப் 'பண்டா' என அழைப்பர். இங்கு மூன்று வேளைகள், காலையில் திருவனந்தல், மதியம் உச்சிக்காலம், இரவு அர்த்த ஜாமம் எனச் சிறப்பாக பூஜைகள் நடைபெறும். திருவனந்தல், உச்சிக்காலம், பூசைகள் மலர்மாலை சூட்டியும், இரவு அர்த்த ஜாமப் பூசைக்கு எம்பெருமானை வெள்ளிக் கவசத்தால் அலங்கரித்து தங்கக் கிரீடமும் வெள்ளிக் குடையும் இட்டு கண்களுக்கு அரிய விருந்தாக்குவர். மூன்று வேளைப் பூஜைகளுக்குமுரிய பொருட்களை நகரத்தார் சத்திரத்திலிருந்து மேளதாள வரிசையுடன் 'பண்டா' ஒருவரே தலைமையேற்றுக் கொண்டுவருவார்.

இரவு 7மணி தொடக்கம் 8மணி வரை நடைபெறும் சப்தரிஷி பூஜையில் மூர்த்தி நன்கு அலங்கரிக்கப்பட்டு ஏழு அந்தணர்களால் பக்தியுடன் வழிபாடு நடாத்தப்படும். இவ்வேளை மட்டும் ஏனைய பக்தர்கள் இறைவனைத் தொட்டு வணங்க அனுமதிக்கப் படமாட்டார்கள். இப்பூஜைகள் நிறைவு பெற்றபின் காலபைரவரின் பூஜையோடு சப்தரிஷி பூஜை நிறைவுபெறும். அதன் பின்புதான் பக்தர்கள் இறைவனைத் தொட்டு வழிபடலாம்.

விண்ணை முட்டும் கோபுரங்களையும் வானளாவிய கட்டிடங்களையும் தென்னிந்தியாவில் பார்த்துப் பிரமித்த கண்களுக்கு இவ்வாலயத்தின் கட்டிடமும் சுற்றுப் புறங்களும் பெரும் வித்தியாசமாகவே தோற்றமளிக்கிறது. இவ்வாலயத்தைத் தரிசிக்கச் செல்லும் பாதைகள் மிக ஒடுக்கமானவை. அதன் இருமருங்கும் சந்தனம் குங்குமம் ஊதுபத்தி தீப விளக்குகள் அபிடேக அலங்காரப் பொருட்கள் நிறைந்த கடைகள் இருக்கும். ஆலயத்தினுள் நுழையுமுன் வாசலிலே வீற்றிருக்கின்ற 'துண்டிவிநாயகரை வழிபடுதல் வழக்கம். இவ்விநாயகரைத், துண்டி விநாயகரென அழைப்பதற்கு ஒரு வரலாறு உண்டு.

அசுரன் ஒருவன் காசிநகரின் மகிமையை அறிந்து அப்படியே அதைத் தூக்கிக் கொண்டு ஆகாயமார்க்கமாகப் பறந்து சென்றான். தேவர்கள் இதனை அவதானித்தனர். காசி நகரம் அசுரனால் கவரப்பட்டு விட்டதே எனக் கவலை கொண்டனர். அன்னையாம் உமையிடம் தமது ஆற்றொணாத்துயரை முறையிட்டனர். தேவர்களின் துயர் துடைக்க அன்னை முன் வந்தாள். தனது திருமுகத்திலிருந்து ஐந்து முகங்களும் பத்துத் திருக்கரங்களும் கொண்ட விநாயகரைத் தோற்றுவித்தாள். அன்னையின் அருளாணை விநாயகரே அசுரனிடம் போர் செய்து காசிவிநாயகரை மீட்டு எடுத்தார். தேவரின் துயரத்தைத் துண்டித்த விநாயகரை, அசுரனிடமிருந்து காசியைத் துண்டித்து எடுத்து வந்தமையால் துண்டி விநாயகர் என அழைக்கும் வழக்கம் ஏற்பட்டது.

விஸ்வநாதர் ஆலயத்திற்கு அருகாமையில் மக்கள் யாவருக்கும் அன்னத்தை வழங்குபவளான அன்னபூரணியின் ஆலயம் இருக்கிறது.

தீபாவளியன்று சிவனுக்குத்தேவி அன்னமிடும் சிறப்பான நிகழ்ச்சி பெருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

# கற்சிலை

— மதுரை இராம தர்மலிங்கம் —

''யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்'' சிறந்த மொழி உலகில் எங்கும் இல்லை. என்றான் மகா கவி பாரதி. அது போல இறைவனை துதித்து பாடுவதிலும், அவனை போற்றுவதிலும் தமிழர்களின் சிறப்பே சிறப்பாகும்.


அன்னை தங்கத்தாலான தட்டையும் கரண்டியையும் இரு கரங்களிலும் தாங்கியபடி இருக்க எம்பெருமான் தங்கத் திருவோடு ஒன்றினைக் கையிலேந்தி அன்னையிடம் அன்னம் பெறக் காத்திருப்பார். அன்னை அத்திருவோட்டில் உணவைப் படைத்து ஆண்டவனுக்கு ஊட்டுவார். இக் காட்சியைக் கண்டு மகிழ ஏராளமான பக்தர் அணிதிரள்வர்.

பழமையும் பெருமையும் மிக்க இவ்வான்மீக நகரம் இவ்வுலகச் சிந்தனைக் குறைவிடுமோ என்னவோ கம்பீரமின்றி, பாடாடோபமின்றி வெகு சாதாரணமாகக் காட்சிதருகிறது.

ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கும் மக்களைப் போல உயிர்நீத்த உடல்கள் அடிக்கடி வீதியால் செல்வதும் நிலையாமையை ஏற்கெனவே மக்கள் உணர்ந்தவர்களாக அலட்சியமாயிருப்பதும் சர்வ சாதாரணமான காட்சிகள்.

உயிர் ஒழிந்த உடல்கள் இறுதிச் சடங்குக்காகவும் அநேகமான பிணங்கள் அங்கு எடுத்துவரப்பட்டு கங்கையெனும் புண்ணியதீரத்திலே இறுதிக் கிரியை ஆற்றப்படுவதையும் இன்று இவர் நாளை நாமோ என்று சர்வ சகஜமாக இருப்பதையும் பிறப்பு இறப்பு பற்றிய பிரக்ஞையே இல்லாத தன்மையராயும் திரிவர். உண்மைக்காக வாழ்ந்த அரிச்சந்திரன் கங்கைக் கரையின் இடுகாட்டில் பிணமெரிக்கும் புலையனாகத் தொழில் புரிந்த இடம் அரிச்சந்திரா கட்டம் என வழங்கப்படுகிறது. அங்கு நாம் நீராடும் போது கங்கை நீர் அலைகளெல்லாம் அரிச்சந்திரனைப் போல் உண்மையே பேசு உண்மையே பேசு என எமது காதுகளில் கிசு கிசுத்தன. ''குழந்தையாயிருந்து அறிவுதெரிந்தபோது'' அப்பு சாமி கும்பிடு' எனப் பெற்றோரால் தொடக்கப்பட்ட பக்தியும் நம்பிக்கையும் இத்தனை பிரமட்டமான நம்பிக்கையும் தெய்வீகமும் நிறைந்ததா?'' என்ற மலைப்பில் கூப்பிய கரங்களுடன் கண்களில் நீர்மல்க காசி க்ஷேத்திரத்தை மண் தொட்டு வணங்குகின்றோம்.

அந்த காலத்தில் மன்னர்கள் இறைவனுக்கு கற்கோயில்களை உருவாக்கினார்கள். ஏன், கல் என்றும் தேய்ந்துபோகாது என்பதற்காகத் தான். தமிழக கோவில்கள் ஒவ்வொன்றும் இன்றும் பேசிக் கொண்டிருக்கின்றன. காரணம் அதை வடித்த சிற்பிதான்.



மதுரை இராம தர்மலிங்கம்

மனதில் மகிழ்ச்சியும், ஒருமைப்பாடும் இருந்தால் தான் உயர்ந்த காரியங்களை செய்ய முடியும். ஒருவனுக்கு உணவு, உடை, வீடு இது மூன்றும் அன்றும் இன்றும் என்றும் அவசியம் தேவை படுவது தான்.

அக்காலத்தில் சேரன், சோழன், பாண்டிய மன்னர்கள் நம் மண்ணை ஆண்டிருக்கிறார்கள் என்பதை சரித்திரம் சொல்கிறது. மேல் கூறிய மூன்று பிரச்சினைகளும் ஒரு மனிதனுக்கு கிடைத்து விட்டால் அவன் எதையும் செய்து விடுவான். இக் காலத்தில் எதை எடுத்தாலும் பற்றா குறைதான். இதனால் சரியாக வாழ்வதிலே தமிழன் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டியதாக உள்ளது.

பிறமதத்தவர்கள் பளிங்கு, இன்னும் வேறு பல உபகரணங்களால் இறைவனை படைத்து வழிபட்டார்கள் அதன் இன்றைய பராமரிப்பு சிலவும் எக்கச் சக்கம் (உ+ம்) அன்னை வேளாங்கண்ணி, நாகப்பட்டணம் முஸ்லிம் பள்ளிவாசல்.

ஆனால் தஞ்சை பெரிய கோயில் ராமேஸ்வரம் கோயில், மதுரை மீனாட்சி அம்மன், பழனி முருகன் இந்த கோயில்களின் பராமரிப்புச் சிலவு மிகவும் கம்மியே.

இதில் இருந்து நமக்கு ஒரு விஷயம் புலனாகிறது. அக் கால மன்னர்கள் எதிர்கால பிரச்சினைகளை ஆராய்ந்தே திட்டம் போட்டு கற்களில் கலை வண்ணத்தை கண்டிருக்கிறார்கள் என்று ஒவ்வொரு கற்சிலையும் பேசுகிறது. இன்றும், நாளையும் என்று நாம் திட்டவட்டமாக நம்பலாம். சிலைகளின் படைப்பு ஒவ்வொன்றும் கம்பீரமாகவும், உயிரோட்டத்துடனும் இன்றும் காட்சிக் கொடுக்கின்றன. காரணம் அந்த சிலைகளை வடித்த சிற்பி கல்லை அவ்வளவு கம்பீரத்துடனும், பொறுமையுடனும்' உயிர் ஓவியமாக வடித்துள்ளது தான் காரணம்.

(உ+ம்) காளி சிலையை எடுத்துக் கொண்டால் அதன் தோற்றம், முகபாவனை, நின்றிருக்கும் காட்சி, கைகளை உயிர்த்துடிப்புடன் தூக்கி இருக்கும் நிலை எல்லாம் ஒரு உக்கிரமான தோற்றத்தை நமக்கு உண்டாகிறது.

முருகன் சிலையை எடுத்துக் கொண்டால் பால் வடியும் முகம், ''யாம் இருக்க பயம் ஏன்'' என்ற காட்சி நம்மனதை கொள்ளை கொள்கின்றது.

எனவே அந்த கால மன்னர்களால் சிற்பி செதுக்கிய சிலைகள் இன்றும் நாளையும் காவியம் படைத்து கொண்டிருக்கின்றன.

கற்சிலைகள் பேசவில்லை என்று சந்தர்ப்பவாதிகளும், பகுத்தறிவு மேதாவிகளும் சொல்கிறார்களே இது உண்மையா என்று எண்ணிப்பார்க்கும் போது ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் தெய்வங்கள் எப்படி பேசுகின்றன அவற்றின் சிறப்பு என்ன என்பதை பார்ப்போம்.

தாய் குழந்தையை ஈன்றாள்.
வாய் சிரித்து மகிழ்ந்தது அந்த குழந்தை
துள்ளி திரிந்தது சில காலம்
தொல்லைகள் தொடரப் போவது தெரியாத
நேரம் அன்றோ அது.

பெற்றவர்கள் கல்விகூடம் சென்று வா
என்றனர்.
கற்ற கல்வி வாழ்வுக்கு திருவிளக்காக
அமையுமா அது?
நாட்கள் மாதங்களாகி வருடங்களாக ஓடவே.
ஏட்டின் துணையுடன் பல கல்விகள் கற்றிடவே
கற்ற கல்வி முற்று பெற்ற காலத்தில் ஏற்றம்
தரும் தொழில்தனை தேடி அலைந்திடவே

பருவம் என்ற காலப் பறவை பறந்துவர
உருவத்தில் அழகு சிலையாக ஒருவன்
கிடைத்தனவோ!

இன்ப களத்தில் ஏறி வாழ்க்கை என்ற
கடலில் ஓடி விளையாடிடவே
துன்பமும் படை எடுத்து வந்ததல்லவோ
வேதனையில் நீ ஆழ்ந்து துடிக்கையிலே!
சாதனைகள் பல படைத்த கற்சிலை
தெய்வங்கள் உன்னை காத்திடவே

அப்போதுதான் அந்த தெய்வங்களின்
மகிமையை நீ உணர்ந்தாயோ!
எப்போதும் அவன் அன்றி ஒரு அணுவும்
அசையாதே!
விநாயகர், முருகன், பரமசிவன், பார்வதி
காளி என நாம் இட்டப்பெயர்கள்
வீணான வார்த்தை அலங்காரங்கள் இல்லை
என உணர்ந்தோமே.

நம் தெய்வச் சிலைகளை பற்றிய உண்மைகளை நம்மை விட மேல் நாட்டவர்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள் என்று சொல்லலாம். அன்று மன்னர்கள் கட்டிய மாட மாளிகைகள் எல்லாம் பல நிலப் பரப்பை தொட்டு பல நுணுக்கங்களுடன் காணப்பட்டன. அவைகளில் பெரும் பகுதி இன்று மறைந்து மண்மேணாடு மண்ணாக மறைந்து விட்டன.

விலை உயர்ந்த ஆபரணங்கள், வைரக் கற்கள் யாவும் அன்னியர்களால் அபகரித்துக் கொண்டு போகப்பட்டது. ஆனால் மண்ணுள் கட்டிய மாளிகை போல இல்லாமல் மன்னர்கள் பெரிய கற்களால் ஒரு நபரால் தனித்து கட்டி பிடிக்க முடியாதபடி கோயிலை கட்டி இருக்கும் காரணத்தால் கோயில் பழுது போகாமல் அன்னியர்களால் அபகரித்துக் கொண்டு போகப்படாமல் இன்றளவும் தெய்வங்கள் நம்முடன் இங்கேயே இருக்கின்றன.

மற்றும் இன்றளவும் மேல் நாட்டில் இருந்து வரும் வெள்ளைக்காரர்கள் நம் கோயிலுக்கு வந்தால் ஒவ்வொரு சிலைகளையும் மணிக்கணக்காக பார்க்கிறார்கள். காரணம் அதன் கலை நயத்தை எண்ணி வியக்கிறார்கள். அதே சமயத்தில் அக்கால சிற்பி எவ்வளவு சிரமப்பட்டு எத்தனை நாட்கள் மாதங்கள் தவம் இருந்து சிலைகள் வடித்துள்ளார்கள் என்பதை எண்ணிப்பார்ப்பார்கள்.

மேல் நாட்டவர்கள் இன்று பல கண்டு பிடிப்புக்களை உலகுக்கு படைத்து கொடுத்து இருக்கிறார்கள். அவர்கள் கண்டுபிடித்த பொருட்களை எண்ணி இன்று நாம் வியக்கிறோம். ஆனால் அன்று மன்னர்களும் சிற்பிகளும் செய்த சிலைகளைக் கண்டு அவர்கள் வியக்கிறார்கள்.

எதிர்காலத் தமிழ் மக்களும் நெஞ்சை நிமிர்த்தி நிற்கும் வண்ணம் செய்த அக்கால சிற்பிகளின் சேவைகளை எண்ணி மகிழ்வோமாக. தற்சமயம் கோயில் சிலைகளின் மேல் அலங்கரிக்கப் பட்ட அணி கலன்களை கள்வர்கள் திருடிக் கொண்டு போகிறார் கள் என்ற செய்தி பத்திரிகைகளின் வாயிலாக நமக்கு தெரியக் கூடியதாக உள்ளது.

திருட்டு செய்திகளை மட்டும் தான் பத்திரிகை போடுகின்றனவே தவிர திருடியவர்களின் தனிப் பட்ட வாழ்க்கை எப்படி அமைகிறது. அவர்கள் கண்டு பிடிக்கப்பட்டார்களா? அல்லது களவு போன பொருட்கள் மீண்டும் கை பற்றப்பட்டனவா? என்ற உண்மைகள் நமக்கு தெரிவதில்லை ஆனால் நிச்ச யம் கோயில் சிலைகளில் உள்ள ஆபரணங்களை திரு டியவர்கள் வாழ்க்கை பெரிய துன்பத்தில் தான் முடிந்து இருக்கும்.

எனவே அன்று படைத்து உயிரூட்டப் பட்ட சிலைகளை இன்று பார்த்து அவற்றை இதய பூர்வ மாக வணங்குவோமாக. அப்போதுதான் நாம் அக் கால சிற்பியின் நம் தமிழ் மண்ணின் பெருமையை உணர்ந்தவர்களாவோம்.

ஒவ்வொரு ஒன்றே முக்கால் வரிகளிலும் உலக வாழ்வின் கல்வி, இன்பம், நட்பு, துன்பம், காதல், மனிதத்தன்மை, இவைகளை துல்லியமாக நமக்கு படைத்துக் கொடுத்து விட்டு சென்றானே திருவள்ளுவன்!

பாசத்துக்கு ஒரு பகுதி
காதலுக்கு ஒரு பகுதி
பணிவுக்கு ஒரு பகுதி
நட்புக்கு ஒரு பகுதி
வீரத்துக்கு ஒரு பகுதி
என எல்லா குண நலன்களையும் எடுத்து சொல்லி உயிர் ஓட்டமாக படைத்தானே ''கம்பன்'' இரா மாயணத்தில் கவிதைத் தேனை பிழிந்து எடுத்து சொன்னானே

தமிழ் உள்ள வரை — புகழ் பெற்ற மதுரை மீனாட்சிசன்னிதானத்தில் சிலப்புக்காக உண்மை கேட்டு போராடினாளே — அந்த பெண் தெய் வம் கண்ணகியை படைத்த இளங்கோ அடிகள் இன்னும் நம்முடன் பேசிக் கொண்டிருக்கிறார் கள்...

மேற்கூறிய நம் முன்னோர்கள் படைத்த உயி லும் — மேலான படைப்புகள் இன்றும் நாளை யும் இருக்கும் வரை —
அக்கால மாபெரும் சிற்பிகள் தங்கள் பொன் னான நேரத்தை பணயம் வைத்து — இரவு என்றும் பகல் என்றும் பாராமல் செதுக்கிய உயிர் ஓட்டம் கொண்ட சிலை இன்றும், நாளையும், என்றுமே நம்மிடமும், நமது வருங் கால சந்ததிகளிடமும் பேசிக் கொண்டு தான் இருக்கும்.

உலகத்தில் உள்ள எந்த மொழியை எடுத்துக் கொண்டாலும் பெண் — என்ற வார்த்தைக்கு சில மறு வார்த்தைகள் மட்டும் தான் இருக்கும் — நம் தமிழ் மொழியை எடுத்துக் கொண்டால் பெண் என்ற வார்த்தைக்கு — பல வித்தியாசமான புதுமை யான, பெயர்கள் உண்டு. மங்கை, மடந்தை, கன்னி இப்படி பல பருவத்தை குறிக்கும் வார்த்தைகளும் உண்டு. ஒரு பொருளுக்கு பல வார்த்தைகள் இருப் பது தமிழ் மொழியில் மட்டும் தான் — தமிழ் மொழியில் பல வார்த்தைகள் இருப்பதை போல நம தமழர்களும் தெய்வத்துக்கு பல பெயர்கள் சூட்டி மகிழ்ந்திருக்கிறார்கள், அதனால் தான் பல வடிவ தெய்வங்களும் நம்முன்னோர்கள் சிலையாக வடித்துள்ளார்கள். எனவே கற்சிலையாக உருவாகி உள்ள தெய்வத்தை மதிப்போம். நம் முன்னோர்கள் உருவாக்கிய தெய்வங்களை வணங்குவோம்.

# தாமதமேனோ..?

இந்து மதத்தின் இனிய மணத்தை
இந்துக்களாலேயே இழித்துக் கூறப்படும் இக் கால கட்டத்திலோ.........?
இல்லை; இல்லை;
இதன் மகிமை இன்னதென்று கூறுவேனோ என்று
இடித்துரைத்து கூறி
இனிய தமிழமுது படைக்கும்
'இந்து கலாசார' இதழின் பெருமை
என்னவென்று கூறுவேன் நான்...?
இலங்கை தொட்டு இங்கிலாந்து வரை
இனிய மணம் வீசிடும் இவ்விதழில்
இல்லாத அம்சங்கள்தான் ஏதுமுண்டோ கேளிர்...?

பாமரர், படித்தவர், பணக்காரர் என்றோ
பிணியானர், முதியோர் என்றோ
பேதம் பாராமல் படித்துச் சுவைக்க
பாரினில் இதைவிட பொக்கிஷங்களின்
பேழை ஏதுமுண்டோ சொல்லிடுவீர்...?

தத்துவ முத்துக்களை தாரையாய் கோர்த்து
தெளிவுறா மாந்தர்க்கு தெவிட்டாதமுது படைக்கும்
தேன் தடாகமன்றோ இத்திங்கள் இதழ்...?
இந்து திங்களின் விலை பத்துதானென்றாலும்
இதன் உலை அழியாத சொத்தென்றோ...?
தேன் சுவைத்து தெளிவு பெற
தென்னிலங்கை மாந்தரே இன்னமுமேனோ
தேவையில்லாத் தாமதமோ......?

— கனகசாந்தி —
பொத்துவில் - 03.

# சைவ நெறியும் இறை நம்பிக்கையும்

— கனகசாந்தி —

பகுத்தறிவு எனும் ஆறாவது அறிவு படைத்த இவ்வுலக மக்கள் எல்லோரும் ஒவ்வொரு வகை சமயத்தை பின்பற்றினாலும், ஒவ்வொரு சமயத்திலும் சில அடிப்படைக் கோட்பாடுகள், அனுட்டானங்கள் கிரியைகள் என்பன உண்டு. இவ்வகையில் எமது ஆதியும் அந்தமுமில்லா சைவ சமயத்தவரை எடுத்துக் கொண்டால் நமது நெறியே வாழ்க்கை நெறி என்று கூறுவதே மிகப் பொருத்தமானதாகும் சமயமானது எல்லோராலும் மதிப்பிடப் படுகின்றதென்பதற்கு ''ஒழுக்கத்தை இழந்தவன் தன் சமயத்தையும் இழக்கிறான்'' ''ஒருவனின் நடத்தைப் பண்பைக் கொண்டு அவனது சமயத்தை அறியலாம்'' என்றும் மேல் நாட்டுப் பழமொழிகள் சான்று பகர்கின்றன. எனவேதான் சமயமானது மனிதர்கள் அறிவு விளக்கம் பெற்று உறுதி எய்தி இன்ப வாழ்வை எய்த சாதகமாயுள்ளது.

சைவ சமயமானது எல்லா மக்களுக்கும் அவரவர் பக்குவத்திற்கேற்பவும், வயதெல்லைகளுக்கேற்பவும் படிமுறையாய் போதனைகளையும், சாதனைகளையும் வகுத்துள்ளது. அத்துடன் நியாய வரம்பிற்கும், அனுபவத்திற்கும் பொருந்துமாறும் அமைந்துள்ளது. இது மிருகத்தன்மையை விலக்கி, மனித தன்மையை அடக்கி தெய்வத்தன்மையை அடைய வழி காட்டுகிறது. சமய வரம்பெல்லைக்குட்பட்டு நாம் வாழ வேண்டுமானால் எமக்கு சமய நம்பிக்கை இன்றியமையாததாகும்.

இறை நம்பிக்கையும், இறை வழிபாடும் இல்லாத வாழ்க்கை அது வாழ்க்கையாக மாட்டாது. இந்த இறை நம்பிக்கையானது ஒருவனை தீய வழிகளிலிருந்து விடுபட உதவுகிறது. இதற்கு உதவுகோள்களாக எமக்கு விரதங்கள், பண்டிகைகள், விழாக்கள் என்பன கை கொடுக்கின்றன. இவைகளின் அடியாக நாம் இவைகளை கடைப்பிடிக்கப்படும் போது மனம் தூய்மை அடைந்து நல்லெண்ணங்கள் பெருகி சமுதாயத்தில் நற்பிரஜை எனும் நாமத்தை சூடிக் கொள்கிறோம் ஒரு தனிமனிதனது வாழ்க்கை செம்மையுற சமயமே வழி வகுக்கிறது. இதனால் தான் ஒருவனது சமய வாழ்வு அவனை மட்டுமன்றி அவனது குடும்பத்திலும், சமுதாயத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பொதுவாக சிறப்பான சமய வாழ்வு வாழ்கின்ற ஒருவனது குடும்பத்திலே பக்தி அந்நியோன்யம், பொதுநலம் பேணும் மனப்பாங்கு, மகிழ்ச்சி போன்ற நற்பண்புகள் தோன்றி நற்சிந்தனை வளர்ந்து நற்செயல் மலர்வு பெறுகிறது. ஆனால் இவ்வாறான நல்ல செயல்கள் உருப்பெற வேண்டுமானால், சமய நெறியில் நின்று ஒழுக வேண்டுமானால் சமய நம்பிக்கை பற்றுக் கோடாக அமைகிறது. சைவ மக்கள் தம் வாழ்வில் நன்மையோ, தீமையோ எது ஏற்படினும் ''எல்லாம் இறைவன் செயல்'' ''அவனன்றி ஓர் அணுவும் அசையாது'' என்று கூறி அந்த இறைவன் மேல் கொண்ட நம்பிக்கை அசையாமையினாலேயே கூறி அமைதி அடைகின்றனர். இந்த நம்பிக்கையினாலேயே நாம் இறை வணக்கத்தை மேற்கொள்கிறோம். இதையே தான் வள்ளுவரும் இறைவனை வணங்காத தலை தனக்குரிய செயலை இழந்த அங்கமாகும் என்று''

''கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை'' எனும் அடிகள் மூலம் கூறியுள்ளார்.

நாம் இறை வணக்கத்தை எமது இல்லத்தில் மட்டுமே நடத்த முடியாது. ஏனெனில் வீட்டில் இறைவழிபாடு நடத்தும் போது மன வொடுக்கம் மனத்தூய்மை என்பன ஏற்பட சந்தர்ப்பமிருக்காது போகலாம், எனவேதான் ஆலயத்துக்குச் சென்று வழிபடும் போது எமக்கு மனத் தூய்மையும், மனவொடுக்கமும் தாமாகவே உண்டாகிறது. ஆத்ம திருப்தி எம்மையறியாமலேயே ஏற்படுகிறது. இதை விட பசுவின் உடல் முழுவதும் அதன் பால் வியாபித்திருந்தாலும் அதன் மடியைப் பிடித்தாலேயன்றி பால் பெற முடியாது. இதே போலவே இறைவன் எங்கும் வியாபித்திருந்தாலும் ஆலயத்துக்குச் சென்றாலன்றி அவனருளைப் பெற முடியாது என்னும் உண்மைக் கேற்பவும் இறைவழிபாட்டில் ஆலய வழிபாடு முக்கியமாக்கப் படுகிறது. இதிலும் ஆலய வழிபாட்டின் போது இறைவனிடம் பக்தியொன்றையே மனதில் இருத்தல் வேண்டும். ஐம் புலன்களும் சிதையா வண்ணம் இறைவனிடம் மனதால் ஒன்றி வழிபடுதல் வேண்டும் என்பதை பட்டினத்தார் கூறி, கீழ்வரும் அடிகள் மூலம் இறைவனை 'வணங்கினால் என்னாகும் என்று கேட்கிறார்.

''கையொன்று செய்ய விழியொன்று நோக்க
கருத்தொன்று எண்ணும்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால்
கமழும்

# 'நடமாடும் தெய்வம் - பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா'

ஒரு மனிதன் தன் வாழ்நாள் முழுதும் ஓயாது படித்தாலும் கூட கீதையை முற்றும் முழுதாக படித்து முடித்திட முடியாது. ஆயினும் அதனது முழுசாரமும் கடமையைச் சரியாக செய்து விட்டு பலனைப்பற்றி எவ்வித கவலையும் கொள்ளாதிருப்பது பற்றிய தாகவே அமைகிறது. கீதா நாயகன் ஸ்ரீமத் கிருஷ்ண பரமாத்மா எங்கே அக்கிரமம் அநியாயம் தலை விரித்தாடுகிறதோ அங்கே நான் தோன்றுவேன் என அருளியுள்ளார்.

மேற் கண்டவாறு பிரபல பத்திரிகையாளரும் சமூக சேவையாளருமான அன்பு கடல் அ பொன்னம் பலம் காவத்தை நீலகாமம் ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் நடைபெற்ற பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் 58 வது ஜயந்தி விழாவில் உரையாற்றும் போது குறிப்பிட்டார். ஆலய பிரதம குரு ஸ்ரீலஸ்ரீ எம். எம். விஸ்வநாத குருக்கள் தலைமையில் நடந்த மேற்படி விழாவில் அவர் மேலும் தொடருகையில் பஞ்சபாண்டவரும், கௌரவரும் ஒன்று விட்ட சகோதரர்கள். இருந்தும் இளையவர்கள் மூத்தவர்களால் வஞ்சிக்கப்பட்டார்கள்.

அநீதி பெருகியது. அக்கிரமம் தலை விரித்தாடியது. பாரதப் போரே இதனால் ஏற்பட ஏதுவானது. ''மகாபாரதமே உருவாக இதுவே காரணமானது. சத்தியமும், தர்மமும் நிலைத்திட இது வழி காட்டியது ஸ்ரீமத் நாராயணன் கண்ணனாக அவதரித்தார். நீதியை நிலைநாட்டினார். சத்தியத்தை காத்தருளினார்.

கம்பராமாயணத்திலே இராம பிரானின் கற்புக் கரசியாம் சீதா தேவியை இலங்கை வேந்தன் இராவணனாற் கவர்ந்து அசோக வனத்தில் சிறை வைத்திருந்தான் அது மாபெரும் தவறு என்பதை தெளிவாகத் தெரிந்தும் கூட தன் கர்வத்தை வெளி விடாது தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்ற வகையில் விட்டு கொடுக்காது நின்றான். இராம பிரானால் வதைக்கப் பட்டான். பழிபாவம் இழப்பு பின்தானே அழிய நேர்ந்தது கம்பராமாயணமே தோன்ற ஏதுவானது.

---

மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க
விரும்புமியான்
செய்கின்ற பூசை எவ்வாறு கொள்வர்
வினை தீர்த்தவனே!

எனவேதான் சைவர்களாகிய நாம் சமய நெறி நின்று ஆலய வழிபாடு கண்டு இறைநம்பிக்கை கொண்டு எம்மையும், ஏனையோரையும் தூய்மைப் படுத்துவோமாக!

இன்றோ நம் கண் முன்னாலேயே நடமாடும் தெய்வீகச் சுடராக பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா விளங்கிவருகிறார்.

உண்மைக்கு மாறாக நீதிக்கு நேராக மனித தர்மத்துக்கு விரோதமாக சத்தியத்துக்கு பாதகமாக நடந்துகொண்ட இராவணனுக்கு முடிவு எப்படி யானது? இதே போல் பஞ்சபாண்டவர் துரோபதை விடயத்தில் நடந்து கொண்ட வணங்காமுடியோன் துரியோதனனுக்கு முடிவு என்ன ஆனது.

இவை யாவற்றிற்கும் ஒரே அருமருந்தாக இன்று பகவான் போதித்து வழிகாட்டி வருகிறார். அவரின் அதிசயம், போதனைகள் மூலம் விழிப்புணர்ச்சி கொண்டு ஆயிரமாயிரம் பக்தர்கள் அவரை அன்போடும் பணிவோடும் ஏற்றி போற்றி துதித்து வருகிறார்கள்.

முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்து எண்ணாயிரம் ரிஷிகள், 64 நாயன்மார்கள் எம்மை பாதுகாத்து அருள் பாலித்து வரும் இவ்வேளையில் பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா நடமாடும் தெய்வமாக அருள் பகன்று வருவது நாம் கொடுத்து வைத்தவர்களே பாக்கியசாலிகளாகும்'' என்றார்.

---

## அருள்மொழி அரசு இறைவன் தந்த பரிசு

பெரியவர், வாரியார் சுவாமி அவர்கள் சமயப் பிரசங்கங்களுக்கு ஒரு தனி மெருகு ஊட்டியவர் சிறுபாலர் முதல் முதியோர்வரை, படித்தவர்களுக்கும் படியாதவர்களுக்கும் எளிதாக மனதில் பதியும் வகையில் யதார்த்தமான, பக்குவமான, உவமானங்கள் மூலமாக இறைவன் புகழையும், சைவ சமய மேம்பாட்டையும் அழகிய தமிழிலே சிறந்த இசையோடு உலகம் எல்லாம் பரப்பி வந்தவர்.

இலங்கைக்கு பல முறை விஜயம் செய்து நம் அனைவரையும் பக்தி பரவசத்திலே, மெய் சிலிர்க்க ஆழ்த்தியவர். இடையறாது, ஓய்வு ஒழிவு இல்லாமல், இரவு பகலாக இறைவன் புகழ் பரப்புவதிலேயே தன்னை அர்பணித்தவருக்கு எம்பெருமான்:-

' ஓய்வு நாள், உணர்வு அழியும் நாள், உயிர் போகும் நாள்.........'' அருளி வானத்திலே தேவர்கள் புடைசூழ தன்பதம் அணைத்துக் கொண்டுள்ளார்.

அறுபத்தி மூன்று நாயன்மார்களைப் பற்றி புராணங்களிலே படித்தோம். அறுபத்தி நான்காம் நாயன்மார் என்று எல்லோராலும் அழைக்கப்பெற்ற வாரியார் சுவாமிகளை நாம் நேரிலே பார்த்து, பேசி, அவர் வாழ்ந்த காலத்திலே நாமும் இருந்திருக்கின்றோம் என்று எண்ணும் பொழுது மெய் சிலிர்க்கின்றது

# அவனியில் பவனி

நா. ஹரிதாஸ்

★ இலங்கையிலிருந்து 53 இந்து விக்கிரகங்கள் கனடா நாட்டிற்கு கண்காட்சிக்காக ஏலவே அனுப்பப்பட்டிருந்தன. அனுப்பப்பட்ட பட்டியலிலுள்ள 53, விக்கிரகங்களில் தற்போது 51 விக்கிரகங்களே இருப்பதாக தெரியவருகின்றது. இரண்டு விக்கிரகங்களுக்கு என்ன நடந்தது என்பது மகா மர்மமாக இருக்கின்றதாம்.

★ வத்தளையிலுள்ள றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் வித்தியாலயம் கிறிஸ்தவ ஆலய வளவிற்குள் அமைந்துள்ளது 1953ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இவ் வித்தியாலயத்தில் ஆண்டு 5 வரை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இவ் வித்தியாலயத்தில் பயிலும் மாணவர்களில் 80% இந்து மாணவ மாணவியரே. இந்து மாணவ மாணவியர் அதிகமாக பயில்வதால் இவ் வித்தியாலயம் இந்துக்களின் ஆதிக்கத்திற்குட்பட்டு விடும் என்ற காரணத்தினால் இவ் வித்தியாலயத்தை மூடிவிடுவதற்கு அந்த கிறிஸ்தவ ஆலய மதகுருமார் முயன்று வருவதாக மேற்படி வித்தியாலய அபிவிருத்தி சங்கக் கூட்டத்தில் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்துக்களுக்கு பொறுப்பான அமைச்சும், கல்வி அமைச்சும், மற்றும் இந்து நிறுவனங்களும் இது சம்பந்தமாக தகுந்த நடவடிக்கைகள் எடுக்க முன்வருமா?

★ இலங்கையில் உள்ள இந்து ஆலயங்கள் பலவற்றில் முறைப்படி பூஜை முறைகள் நடைபெறுவதில்லை. இதற்கு பூசகர்களுக்கு முறையான பயிற்சியின்மையே காரணம். அமைச்சர் தொண்டமான் தமது தமிழக விஜயத்தின் போது காஞ்சி காமகோடி பீடாதிபதியை சந்தித்து இலங்கையில் உள்ள பூசகர்களுக்கு பயிற்சி அளிக்க பீடாதிபதியை வேண்டிக் கொண்டதற்கிணங்க, பீடாதிபதி தமிழகத்தில் பயிற்சியை மேற்கொள்ள தாம் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார். இந்து மத வளர்ச்சியில் அக்கறை செலுத்திவரும் காஞ்சி காமகோடிபீடம் கோவில்களில் முறையான பூஜை வழிபாடுகள் நடைபெற்றால் தான் மக்கள் உரிய பலனை அடைய முடியும் எனக் கருதிச் செயல்படும் ஒரு இந்துமத பீடம். அமைச்சர் தொண்டமானின் இந்த உயரிய முயற்சி பெரிதும் வரவேற்கத் தக்கதாகும்.

★ இலங்கையின் தென் மாகாணத்தில் உள்ள சக்தி வாய்ந்த சிவன் ஆலய திருப்பணி வேலைகள் துரிதமாக நடைப்பெற்றுக் கொண்டிருக்கின்ன. ஆலய வளவிற்கூடாக செல்லும் பொதுப் பாதை ஒன்றை மூடி ஆலயத்திற்கு சற்றேனும் இடைஞ்சலில்லாமல் ஆலயத்திற்கு புறம்பாக பாதையை அமைத்தமை வியக்கத்தக்க விடயம் ஒன்றாகும். இவ்வாறு பலவிதமான வியக்கத்தக்க வகையில் திருப்பணி வேலைகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. திருப்பணிவேலைகள் தொடர்ந்தும் எதுவித தங்கு தடையின்றியும் எளிதாக நடைபெற எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிப்பாராக.



சிலாபத்தைச் சேர்ந்த கந்தசாமி பரந்தாமன் அண்மையில் சிலாபம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிவான் சி. எம். என். டி. சில்வா முன்னிலையில் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

றோயல் கல்லூரியின் பழைய மாணவரான இவர் வி. ஜி. கே. நிறுவனங்கள் கந்தசாமி கம்பனிகள் குழு ஆகியவற்றின் தலைவரும் லயன் - இயக்குநருமாவார்.

காலஞ்சென்ற பிரபல தொழிலதிபர் கந்தசாமியின் புதல்வரும் சிறந்த சமூக சேவகருமான இவர் இந்து கலாசாரப் பணிகளில் முன்னின்று உழைப்பவராவார்.

# "சக்தி வழிபாடு" - நூல் வெளியீடு

இரா. வைத்திமாநிதி

கொழும்பு மாநகரிலே நவராத்திரி விழா மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்படுகின்றது. இந்த நல்ல நாளிலே கொட்டாஞ்சேனை வரதராஜ விநாயகர் ஆலய அறங்காவலர்கள் — திரு நீதிராஜா, திரு. ஈஸ்வரன், திரு. பாலசுந்தரம் ஆகியோர் ''சக்தி வழிபாடு'' என்ற ஒரு அருமையான, அம்பிகையின் பாடல் தொகுப்பு ஒன்றை பிரசுரித்து வெளியிட்டு இருக்கிறார்கள்.

நல்ல பயனுள்ள இந்த பாடல் தொகுப்பு புத்தகத்தை கையில் எடுத்த உடனேயே நம் மனதில் அம்பிகையின் திரு உருவம் அப்படியே பதிந்து நிற்கும் வகையில் பளிச்சென்று பிரகாசமாகவும், தத்ரூபமாகவும் இருக்கின்றது. தொடர்ந்து பக்கங்களைப் புரட்டி பல பாடல்களைப் படிக்கும் பொழுது அதன் இடையில் வரும் மற்றைய அம்பிகையின் திரு உருவப் படங்கள் நம்மை மெய் சிலிர்க்க வைக்கின்றன.

அம்பிகையின் வழிபாட்டில் பக்தர்களுக்கு மிகவும் அவசியமான இந்த பாடல் தொகுப்பை கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகணானந்தா தலைமையில் வரதராஜ விநாயகர் ஆலயத்தில் 16-10-93 அன்று வெளியிடப் பட்டது. அதனைத் தொடர்ந்து நவராத்திரி ஒன்பது தினங்களும், தமிழ் நாடு, குற்றாலம், பராசக்தி கல்லூரி பேராசிரியை திருமதி டாக்டர் ஆர். சௌந்தரவல்லி அம்மையார் அவர்களின் ஆன்மீகச் சொற்பொழிவும் மிகவும் சிறப்பாக நடந்தது.

அறங்காவலர்கள் என்றால், கோவில், பூஜை திருவிழாக்கள் என்று மட்டும் இல்லாமல் ஆன்மீகப் பணியுடன் சமூதாயப் பணியையும் சேர்த்து செயல்பட வேண்டும் என்று எமது ''இந்து கலாசாரம்'' பத்திரிகையில் பலமுறை வலியுறுத்தி வருகின்றோம். இதன் அடிப்படையிலே வரதராஜவிநாயக ஆலய அறங்காவலர்களின் தமிழும், சமயமும், இலக்கியமும் சேர்ந்த பணியை வரவேற்கின்றோம். கடந்த ஆண்டு இவர்கள் ''விநாயகர் வழிபாடு'' என்ற நூலை தொகுத்து வெளியிட்டனர் என்பதும் குறிப்பிடத் தக்கது. இவர்களின் முயற்சிகள் இன்றும் பல தமிழ் சமய, இலக்கியப் பணிகளில் ஈடுபட எல்லாம் வல்ல வரதராஜ விநாயகர் அருள்புரிய வேண்டும் என்று அவன் தாள் வணங்கி வேண்டிக் கொள்கின்றோம்.

---

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் எழிலுருவமாய் அறிவுலக நுழைவாயிலாய் மாமல்லபுரம் சிற்பக் கலைக்கு இலக்கணமாய் பெருமை சேர்ப்பது தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம். பல்வேறு அரிய நூல்களின் தொகுதியும், பல்வேறு அறிஞர்களின் நூலகங்களும் விலைக்கு வாங்கப்பட்டும். தமிழில் வெளியாகும் அனைத்துக் காலமுறை இதழ்களும் வாங்கப்பட்டும் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. இந்நூலகத்தில் உள்ள நூல்களின் பட்டியல் கணிப்பொறி வழி தொகுக்கப்பட்டு ஆய்வாளர்களுக்குத் தேவையான செய்திகள் மின்னல் வேகத்தில் வழங்கப்படுகின்றன. தமிழியல் குறித்து உலகளாவிய பல்கலைக்கழகங்களில் இதுவரை செய்யப்பட்டுள்ள ஆய்வு விவரங்கள் கணிப்பொறி வழி தொகுக்கப்பட்டு வைக்கப் பட்டுள்ளன. நுண்படங்கள், நிழற்படங்கள், வரை படங்கள், நிலப்படங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தும் வசதியும் இந்நூலகத்தில் உள்ளன.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஆய்வுப்பணிகள் மக்களைச் சென்றடைய பதிப்புத்துறையும், மறு தோன்றி அச்சகமும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பெருமைக்கு பெருமை சேர்க்கும் துணை வேந்தராக முனைவர் அவ்வை நடராசன் அவர்கள் அயராது பணியாற்றி வருகிறார். இவரது அரிய திறமைக்கு அணிசேர்க்க வரவுள்ளது 1995 ஜனவரியில் தஞ்சை நகரில் தமிழ்ப் பல்கலைக்கழக வழி நடைபெறவுள்ள எட்டாவது உலகத்தமிழ் மகாநாடு என்றால் மிகையாகாது.

— நன்றி: தமிழ்ப் பல்கலைக்கழக மலர்கள்

---

## கிருபானந்தவாரியாரின் சிந்தனைத் துளிகள்

★ இறைவனே! இன்று நான் நல்ல வழியில் நிற்க அருள் செய்

★ உடம்புக்குள் உறையும் உயிருக்கு உறுதி தேடு

★ அறிவிலும் ஆற்றலிலும் சிறந்த ஆன்றோர்களை துணையாகக் கொண்டு ஒழுகு.

★ ஓதலின் நன்று ஒழுக்கமுடைமை.

★ அறிவையும் அன்பையும் கெடுக்கக் கூடிய ஆகாரத்தை அருந்தாதே.

★ நீ செய்த புண்ணியத்தைக் கூறாதே பாவத்தைக் கூறு.

★ துன்பங்களை பொறுப்பவனே தவசி.

# உலக சைவப் பேரவையின் இலங்கை ஆலோசனைச் சபைக்கு தவத்திரு. சிவநந்தி அடிகளார் புகழாரம்

உலக சைவப் பேரவையின் இலங்கை ஆலோசனைச் சபைக்கான விசேட கூட்டம் கடந்த 8-2-94 செவ்வாய்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இதன் தலைவர் திரு. கா. தயாபரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. விசேட அதிதியாக உலக சைவப் பேரவையின் செயலாளர் நாயகம் தவத்திரு. சிவநந்தி அடிகளார், கலந்து கொண்டார். இவர் லண்டன் மெய்கண்டான் ஆதீனத்தின் தலைவரும் ஆவார்.

கூட்டத்திற்கு திரு. கா. தயாபரன் (தலைவர்) திரு. பா. சி சர்மா (பிரதித்தலைவர்) திரு. க. சண்முகலிங்கம் (பிரதித்தலைவர்) திரு. ஏ. எம். துரைசாமி (செயலாளர்) திரு. ஆர். வைத்தியமாநிதி (தனாதிகாரி) நிர்வாக உறுப்பினர்களான, திரு க. இ. க. கந்தசாமி திரு. குமார்வடிவேல், திரு. எஸ். தெய்வநாயகம் திரு. நா. ஹரிதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிவநந்தி அடிகளாரை இலங்கை ஆலோசனைச் சபையின் செயலாளர் திரு. ஏ எம். துரைசாமி மலர் மாலை சூட்டி வரவேற்றார். அடிகளாருக்கு தேனீர் விருந்தும் அளித்துக் கௌரவிக்கப்பட்டது. உலக சைவப் பேரவையின் மாநாடு ஒன்றை 1996ம் ஆண்டில் இலங்கையில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்யும்படி சிவநந்தி அடிகளார் இலங்கை ஆலோசனைச் சபையைக் கேட்டுக் கொண்டார். உலக சைவப் பேரவையின் மாநாடு இலங்கையில் நடைபெறும் போது அது சைவத்தை வளர்த்த நாயன்மார்களின் குரு பூசை தினங்களை மையமாக வைத்து நடத்துவது மிக அவசியம் என்ற பிரேரணையை தனாதிகாரி திரு. ஆர். வைத்தியமாநிதி முன் மொழிந்தார். இப் பிரேரணையை அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர் எனவே 1996ம் ஆண்டில் இலங்கையில் நடைபெறும் உலக சைவப் பேரவை மாநாடு சைவ நாயன்மார்களில் முதலிடம் வகிக்கும் திருஞான சம்பந்தர் குரு பூசை தினத்தில் நடத்துவது மிகவும் பொருத்தமானது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

உலக சைவப் பேரவையின் லண்டன் தலைமையகம் தன்னால் இயன்ற உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் நல்கும். இச்சபையும் தன் பணிகளைத் துரிதப் படுத்தி நல்ல செயல் திட்டங்களை எடுத்து நடைமுறைப் படுத்த வேண்டும். தமிழில் அர்ச்சனை பண்ணுவது ஆலயங்களில் சிறந்தது. இதில் கூடிய கவனம் எடுப்பது மிகவும் நன்மை பயக்கும் என்றும் சிவநந்தி அடிகளால் கூறிவைத்தார்.

இச்சபையை ஆரம்பிக்க அரும் பாடுபட்ட திரு. ஏ. எம். துரைசாமி அவர்களை தான் மனதார பாராட்டுவதாகவும். இந்த வயதிலும் அவரின் தளராத ஊக்கம் இச்சபைக்கு மிகவும் வலுவாக இருக்கின்றது எனக் கூறினார். இந்து சமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளரும், இதன் தலைவருமான திரு. கா. தயாபரன் அவர்களும் இச்சபையின் பணியை முன்னெடுத்துச் சென்று ஆக்க பூர்வமான பணிகளை ஆற்றி மிகவும் ஊக்கமுடன் செயற்பட்டு வருகிறார். நிர்வாக உருப்பினர்களும் மிகவும் திறமைசாலிகளாகவே அமைகின்றனர். எல்லோரும் ஒன்றிணைந்து இலங்கை ஆலோசனைச் சபையின் வளர்ச்சிக்கு பாடுபடவேண்டும். தலைமையகமும் தன்னால் முடிந்த உதவிகளையும், ஒத்தாசைகளையும் வழங்கும் என்று கூறினார் தவத்திரு சிவநந்தி அடிகளார்.

---

## "இந்து கலாசாரம்"

இந்து சமய திங்கள் இதழ்

## ஏகவிநியோகஸ்தர் -

## V. S. P. பிள்ளை

வடகொழும்பு - ராமகிருஷ்ண

கல்வி கலாச்சார அபிவிருத்தி அதிகாரி.

---

இந்து கலாசாரத்தை வாழ்த்துகின்றோம்

எல்லா விதமான லெட்டர் பிறஸ் ஒப்செட் வேலைகள்
வெகு துரிதமாக செய்து கொடுக்கப்படும்.

இலங்கையில் பல சித்திரங்களுடன் வெளிவரும் லீலா பஞ்சாங்க
சித்திரக் கலண்டர் தயாரிப்பாளர்கள்.

## லீலா பிறஸ் (பிறைவேட்) லிமிட்டட்


**182 மெசஞ்சர் வீதி,**

**கொழும்பு - 12.**

தொலைபேசி: 325930, 334332

'இந்து கலாசாரம்'

மென்மேலும் வளர்ச்சியுற வாழ்த்துகின்றோம்.



# நந்தன் அச்சகம்

8, கொடுகொடல்ல வீதி,

கண்டி.

"இந்து கலாசாரம்"

மென்மேலும் வளர்ச்சியுற

வாழ்த்துகின்றோம்.

Romax

HARDWARE CENTRE

307/4, OLD MOOR STREET,

COLOMBO 12.

Telephone: 29415

வாழ்த்துகின்றோம்

**CASTLE TRADING COMPANY**

333 1/9, OLD MOOR STREET,

COLOMBO 12.

வாழ்த்துகின்றோம்

GOPALAN TRADING COMPANY

(பிரபல மொத்த அரிசி வியாபாரிகள்)

149 DAM STREET,

COLOMBO 12.

# சிறந்த ஆன்மீக வெளியீடுகள்

ஸ்ரீ காயத்திரி சித்தர் ஆர். கே. முருகேசு சுவாமிகளால் எழுதப்பட்ட, உலகம் அறிந்திராத, மகரிஷிகளால் மர்மமாக வை..கப்பட்டிருந்த ஆன்ம இரகசியங்கள் அடங்கிய ஆன்மீகப்படைப்புக்கள்.

1) ஸ்ரீ காயத்திரி மந்திர மகிமை
2) ஞான குரு
3) மனித உடலின் தெய்வ ஞானம்
4) சகல தெய்வ உபாசனா சித்தி சாதனை
5) மனித காந்தம்
6) எளிய முறை யோகப் பயிற்சி
7) காயத்திரி கீதை
8) காயத்திரி ராமாயணம்
9) காயத்திரி மூலம் குண்டலினி விழிப்பு
10) தியானம்
11) காயத்திரி உபாசனா பத்ததி (சகஸ்ரநாம அர்ச்சனையுடன்)

## ENGLISH

1) Spiritual Teachings
2) The Great Science and Power of Gayathri
3) Meditation
4) Spiritual Tenants of Sri Gayathri Peetam
5) Cosmo Mystic Meditation

### கிடைக்கும் இடம்

**Sri Gayathri Peetam,**
**'Sri Nagar'**
**82, Lady Mc' Callums/Drive,**
**Nuwara Eliya,**
**Sri Lanka.**

இந்து கலாசாரத்துக்கு

எமது வாழ்த்துக்கள்

**RENUKA INDUSTRIES**

*IMPORTERS & EXPORTERS*

MANUFACTURERS IN ALL KINDS

OF

ALUMINIUM WARES

170 - 172, OLD MOOR STREET,
COLOMBO 12.

Telephone: 435579

36264

No Home is Complete Without a....

**SUPREME QUARTZ CLOCK**

The ultimate choice of every house -proud Housewife is a SUPREME Quartz Clock for elegance and perfect performance. SUPREME Quartz Clocks are available in a wide range of dial colours and scenic dials which blend easily whith any decor. Remember when it's time to give a Gift, give a masterpiece of the clock makers art-a SUPREME Quartz Clock.

**ESWARAN BROS**

**267,Sea Street, Colombo-11.**
**Tel: 432599, 427744 ,547608 435842**

**Pearlazzo Bldg. 135 DG, 135D, Galle Road, Dehiwala.**
**Tel: 714724**

**Unit 105, Unity Plaza, Colombo-4**


*Sole Agents For*

**Lego, Matchbox, Waddington, Games Spears and Rovette vedio cassettes.**

விலை
10/-

Registered as a Newspaper at the G.P.O - No. QD/19/NEWS/94

WITH BEST COMPLIMENTS FROM



BE RIGHT WITH

# RIKEN

## Jailaxmi Stores

91A,MALIBAN STREET, COLOMBO 11.

TELEPHONE: 32149, 541329 , 448547 CABLES: "JAYAEXPORT" TELEX: 22744 JLS CE FAX: 94-1-447741

BRANCH : 153, UNION PLACE, COLOMBO 2.

இப்பத்திரிகை கொழும்பு இந்துகலாச்சார மன்றத்திற்காக கொள்ளுப்பிட்டி,, நெல்சன் ஒழுங்கை, 39/23ம்
இலக்க இல்லத்தில் வசிப்பவரும் இதன் ஆசிரியருமான திரு.ஏ.எம். துரைசாமி அவர்களால் கொழும்பு -13,
98-B, ரட்ணம் வீதி, ஒஸ்கா என்ரபிறைசர்ஸ்சில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.